விலை அணா 2

# திராவிடநாடு

மலர் 14. இதழ் 48



# கேட்டீரா சேதியை!

உத்தமர் புத்தரின் விழா கொண்டாடப்படும் இந்தக் கிழமையில் கூடநமது 'அகிம்சா' சர்க்காரின் துப்பாக்கி முழக்கம் கேட்டிருக்கிறது! பஞ்சாபிலுள்ள அம்பாலாவுக்கு அருகிலிருக்கும் கல்கா எனும் புகைவண்டி நிலையத்தில் மே 26-ந்தேதி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நான்குபேர் மாண்டனர். மாண்டது தொழிலாளர்கள், மறக்க வேண்டாம்! ஒன்பதின்மருக்குப் படுகாயமாம். தொழிலாளரின் குறைகளை விசாரிக்க சர்க்காரால் அனுப்பப்பட்ட ஒரு அதிகாரியிடம் அத்துமீறி நடந்து கொண்டனராம், தொழிலாளர்கள்; அதனால், துப்பாக்கிக் குண்டுகள் பொழியப்பட்டதாம்!

*

தொழிலாளரின் சமதர்ம அரசு உண்டாக்கப்போவதாக அனுதினமும் காங்கிரஸ் தலைவர்கள் கர்ச்சித்து வருவது மட்டும் குறையவில்லை. ஆனால், தொழிலாளர்களோ தமதுகுறைகளைக் கூறக் கிளம்பினால் வேட்டுச் சப்தமும், குண்டுமாரியும் நடக்கிறது. இந்தியாவின் வடமேற்கு எல்லையில் அப்படி நடந்ததா? கிழக்கு எல்லையான வங்காளத்தில் கடந்த சில நாட்களாக இரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்! அவர்களிடம் சென்று, குறைகளைக் கேட்டு ஆவன செய்யாது, சட்டம் கொண்டு அடக்கிட முனைந்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

இதன் விளைவு என்னாயிற்று தெரியுமா? காக்பூர் என்ற இடத்தில் 26-ந்தேதி ஒரு ரயில், தானாகவே ஓடிச்சென்று ரயில்பிளாட்பாரத்தைத் தாண்டி ஸ்டேஷன் மீது மோதியிருக்கிறது. இதனால், 70-பேருக்குப் படுகாயமாம். விபத்து ஏற்படக் காரணமென்ன தெரியுமா? கருங்காலி டிரைவர் ஒருவர், வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமல், வேலைக்குச் சென்றாராம்! அதனைக் கண்ட தொழிலாளர்கள், இன்சினுக்குள் தாவி, அவரை இழுத்துக் கொண்டு போயினராம், அதனால், இன்சின் இல்லாத இரயில் ஓடிச்சென்று மோதியிருக்கிறது.

*

டிரைவர் இருந்தும்கூட, நமது இரயில்களில் அடிக்கடி விபத்துகள் நடக்காமலா இருக்கின்றன வென்று கேட்பீர்கள். உண்மைதான்! பழைய ரயில்பாதையைச் செப்பனிடாது, அதன்மேல் அதிகப்பளு கொண்ட வண்டிகளை ஓடவிடுவதால், தண்டவாளங்கள் விரிந்து இப்படி விபத்துகள் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள்.

*

நம்ம ஓ. வி. அளகேசன் இருக்கிறாரே ரயில்வே துணை மந்திரி, என்ன சொன்னார் ஞாபகமிருக்கிறதா, இப்படி ரயில் விபத்துகள் ஏற்படுவதுபற்றி? 23-2-53 அன்று இவர் கோவைக்கு வந்திருந்தபோது, இரயில் விபத்துக்களைச் சுட்டிக்காட்டி பிரயாணிகள் சங்கத்தினர் ஒரு மகஜர் சமர்ப்பித்தபோது, "விதி இருந்தால்தான் விபத்தில் சிக்க நேரும். அதற்குப்பிராயச்சித்தமாக பிள்ளையாருக்குப் பிரயாணிகள் தோப்புக் கரணம் போட வேண்டும்" என்றார் அளகேசன்! விபத்துகள்பற்றி 22—2—53 அன்று திருச்சியில் பேசிய போது, "ஊருக்கு ஊர் ரயில் விபத்துகள் ஏற்படுகின்றன; வண்டிகள் கவிழுகின்றன, மக்கள் பள்ளிபோன்ற இடங்களில் ஏராளமானோர் மடிந்துமிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமோ? பொதுமக்களின் கண் திருஷ்டிதான்" என்றும் சொன்னார்!!

*

இப்படிப்பட்டவர் நமக்கு அமைச்சராகயிருந்தால் நேரு ஏன் அலட்சியமாகப் பேசமாட்டார். மே 26ந்தேதி டில்லி பார்லிமெண்டில மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா டில்லி சர்க்கார் ரயில் பாதை போடுவதில்கூட ஓரவஞ்சனை காட்டுவதாகத் தாக்கினாராம். பதிலளித்த பண்டிதர் மறுக்கவில்லை. "ஆமாம் உண்மைதான்; ஆலைகள் எங்கு துவக்கப்படுகிறதோ, அங்குதான் புதியபாதைகள் போட வேண்டுமென்பது எமது நோக்கம். அதனால்தான் வடக்கில் பலபாதைகள் போடுகிறோம்", என்றாராம். எப்படி பதில்? ஆலைகளும் இங்கு கிடையாது! அதனால் பாதைகளும் கிடையாது!!

*

இந்த இலட்சணத்தில் இவ்வாரம் இங்குவந்திருக்கும் அளகேசன், திருவரங்கத்தில் பேசியிருக்கிறார், "இப்பொழுது திருவிழா காலங்களில் திருவிழா நடைபெறும் பகுதிகளில்மட்டும் யாத்திரை வரி விதிக்கப்படுகிறது. அகில இந்திய அடிப்படையில் ஆண்டு முழுவதற்கும் யாத்திரை வரி விதிக்கும் ஒருதிட்டம் அரசாங்கத்தின் கையிலிருக்கிறது", என்பதாக. எப்படி இலட்சணம்! வரிமேல் வரி போடப்படுமாம். அதுவும் ஆண்டுமுழுதும். ஆனால், புதிய பாதைகளும், சலுகைகளும் மட்டும் கிடையாதாம்!

*

சர்க்காரின் அலட்சியத்தால் மூட்டை முடிச்சுபோல் ஒருவர் மேல் ஒருவர் தாவிக்கொண்டு ரயில்களில் அவதிப்படுகிறோமல்லவா? இந்தக் கொடுமையைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்திருக்கிறார்கள் பூனாவிலிருக்கும் மக்கள். வேதனை சகிக்க முடியாததால் கடந்த 26ந்தேதி விசித்திர நடவடிக்கையொன்று எடுத்தார்களாம். அதன்படி ரயில் கிளம்பியதும், சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தினராம்! இதனால் 5 மைல் செல்ல 5-30 மணி நேரம் ஆயிற்றாம். மக்களின் போராட்ட முறையைக் கண்ட அரசாங்கம், அலறி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாம். அப்படி நம்மவர்களும் ஈடுபட்டால்தான் ஏதாவது பெற முடியும் போலும்!

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 48
3—6—56

# கர்ச்சனையும் கவலையும்

நாளையோ! இன்றோ!! நாடி தளர்ந்துவிட்டது என்பது நன்றாகத் தெரிந்தாலும், "ஒன்றும் பயமில்லை; இந்தச் சூரணம் உள்ளுக்குள் போனதும், வேலை செய்யும்; பிறகு கவலையே கிடையாது" என்று சொல்கிறானல்லவா, வைத்யன், உற்றாரையும் தன்னை நம்பி அழைத்து வந்தவர்களையும் திருப்திப்படுத்த. அதுபோன்ற வைத்யனாகி யிருக்கிறார், நமது முதலமைச்சர்! சீரும் சிறப்புடன் நமது மாநாடு நடந்துமுடிந்த இரண்டொரு தினங்களுக்கெல்லாம் திருச்சிக்குச் சென்று—தேர்தலில் நிற்கப் போகின்றனராம், தி. மு. க.வினர். பார்க்கலாம்! பார்புகழும் எங்கள் காங்கிரசுக்கு இவர்கள் எந்த மூலை? பொதுமக்களின் ஆதரவும் அபிமானமும் காங்கிரசுக்குத்தானிருக்கிறது—என்பதாகக் கர்ச்சித்தாராம்.

அவருடைய 'கர்ச்சனைக்கு' மறுநாள், அவர் போற்றும் அகில இந்தியத் தலைவர் தேபர், நாகபுரியில் கவலை தெரிவித்திருக்கிறார். எந்தப் பொதுமக்களின் ஆதரவும் அபிமானமும் காங்கிரசுக்கு இருப்பதாகக் கூறி காமராஜர், தன்னுடைய சகாக்களுக்குக் களிப்பூட்ட முயற்சித்தாரோ, அதே பொதுமக்களிடையே காங்கிரஸ் பலவீனமடைவதாகக் கவலைப்பட்டிருக்கிறார், தேபர்.

பலவீனமடைவதுமட்டுமல்ல! அந்த அறிகுறிகள் அதிகரித்தும் வருவதாகச் சொல்கிறார் தேபர்!! "பாமர மக்களிடையே காங்கிரசின் பிடிப்பு பலவீனமடைவதற்கான அறிகுறிகள் அதிகரித்து வருகிறது என்று கவலை தெரிவித்தார் தேபர்" — என்கிறது, காமராஜரின் கர்ச்சனையை வெளியிட்ட அதே 'தினமணி' ஏடு.

ஆளம்பு தேடுவது, அடுத்த தேர்தலுக்கு ஆயத்தம் செய்வது, அதிகாரத்தை நிர்வகிப்பது, ஆர்ப்பரிப்போரை அடக்குவது, நண்பர்களுடன் குலாவுவது, புதிய நண்பர்களைப் பிடிப்பது, ஆச்சாரியாரைக் கண்காணிப்பது, இதுபோல ஆயிரக் கணக்கான 'தொல்லை'களில் ஆட்பட்டிருக்கும் காமராஜரைவிட, நாட்டு மக்களின் நாடியை அறியும் நல்வாய்ப்பு தேபருக்கு அதிகம். அவர் இருக்குமிடமும் சாதாரணமானதல்ல! ஆசிய ஜோதியின் அருகே இருக்கிறார் — அமெரிக்காவும், சீனாவும், ரஷ்யாவும், எகிப்தும், யுகோவும், பர்மாவும் போட்டி போட்டுககொண்டு நேரு பண்டிதரை வலம் வரும் காட்சியைக் காண்கிறார்—டில்லி ராமலீலா மைதானத்தில் நேரு பேசிடும்போது கூடிடும் கூட்டத்தைப் பார்க்கிறார் — உலக ஏடுகள் யாவும் ஒவ்வொரு நாளும் பாராட்டித் துதிக்கும் பகுதிகளையெல்லாம் படிக்கிறார்—ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மக்கள் ஆசியளித்துவிட்டார்கள், அங்கும் இங்கும் அதுபற்றியே பேசுகிறார்கள் என்று வானளாவ முழக்கமிடும் வானொலியினையும் திரைப்படச் செய்திகளையும் அறியாதவரல்ல அவர்—ஆயினும், கவலை தெரிவிக்கிறார், பாமர மக்களிடையே காங்கிரசின் பிடிப்பு வரவர பலவீனமடைகிறதாம்!

பம்பாய் ஊழியர் ஒருவர் — பெயர் வரவில்லை 'இந்து'வில்—தேபரை விட, ஒருபடி மேலே போய் விட்டார். "காங்கிரஸ் உயிர்ப்பெற்றுலவ வேண்டுமென்றால், ஒரு தேர்தலில், நன்றாகத் தோற்று மூக்குடைப்படவேண்டும்" என்கிறார், இவர்! ஏனெனில், காங்கிரசின் பெயரைச் சொல்லி எம் எல்,ஏக்களாகவும், மந்திரிகளாகவும் ஆனவர்கள், ஊழலைக் குவித்து, உருத்தெரியாமலாக்கிவிட்டார்களாம், நாட்டை.

மக்களின் செல்வாக்கை இழக்கிறது! மதோன்மத்தம் கொண்டலைகிறது!—என்று, முன்பெல்லாம் எதிர்க்கட்சியினர், இடித்துரைப்பது வழக்கம். இப்போது, காங்கிரஸ் தலைவரும் சொல்கிறார், ஊழியரும் உரைக்கிறார். ஆனால், அதிகாரபீடத்து அமர்ந்திருக்கும் காமராஜரோ, மக்களின் ஆதரவும் அபிமானமும் காங்கிரசுக்கே இருப்பதாகக் கூறுகிறார். சரக்கின் முறுக்குபற்றி விட்டுக்கொடுக்காமல் விளம்பரம் செய்தால்தானே வாடிக்கைக்காரர்கள் வருவார்கள்! விருதுநகராருக்கா, வியாபார இரகசியம் தெரியாது?

*

ஒரு அவலட்சணத்தைக் கேளுங்கள்:

அவர் ஒரு அதிகாரி! அகில இந்திய வானொலியின் மிகப் பெரிய பொறுப்பான டைரக்டர் ஜெனரலாகயிருந்தவர். பெயர், என்.ஏ.எஸ்.இலட்சுமணன்.

பணமோசடி செய்தார், சர்க்காரிடம் சரியாகக் கணக்குக் காட்டவில்லை, நிர்வாகத்திலும் ஒரே ஊழல்—என்று இவர்மீது புகார் வந்தது.

விசாரணை செய்தார்கள்! குற்றங்களும் நிரூபிக்கப்பட்டன!!

குற்றங்கள் சாதாரணமானவையா? அதனால், உடனே இவரை பதவியிலிருந்து விலக்கினார்கள்.

"சரிதானே! சுயராஜ்ய சர்க்கார், எவரையும் விடுமோ?" என்று குதூகலம் அடையக் கூடும் தேசிய நண்பர்கள்.

ஆனால், விஷயம் அதோடு முடிந்து விடவில்லை.

விலக்கப்பட்ட அவரை கொஞ்ச நாட்களுக்கெல்லாம் கூப்பிட்டு இன்னொரு பதவியில் அமர்த்தினார்கள்! அதுவும் எப்பேற்பட்ட பதவி? ஒரு ஆலைக்கே பொறுப்பாளியாகயிருக்கும் பதவி!!

எஃகு, இரும்பு தயாரிக்கும் இந்துஸ்தான் தொழிற்சாலையின் நிர்வாகியாக இவர் அமர்த்தப்பட்டார். அத்தொழிற்சாலை யாருடையது தெரியுமோ? நமது டில்லி சர்க்காரின் நிர்வாகத்திற்குட்பட்டது.

ஊழல் செய்தவர், மோசடி செய்தவ்ர், பதவியிலிருந்து விரட்டப்பட்டவர்! — அவருக்கு அடித்திருக்கிறது, இந்த யோகம்.

சட்டப்படி, கூண்டுக்குள் போட்டு மூடப்பட்டிருக்கவேண்டும்; அப்படித்தான் இப்படிப்பட்ட ஊழல்களில் அகப்பட்டுக்கொண்ட இரண்டொரு பெரிய அதிகாரிகளையும் செய்திருக்கிறார்கள்.

இலட்சுமணனுக்குமட்டும், ஏன் இந்த விதிவிலக்கு? கள்ளன்வசமா கன்னக்கோலைத் தருவது? — என்று டில்லி பார்லிமெண்டில் தோழர் காமத் கேட்டார்.

என்ன பதிலளிக்கமுடியும்? விழித்துத் திகைத்துக் குழப்பத்தைக் கொட்டியிருக்கிறார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

இந்தச் செய்தியை அறியும் பாமர மக்களிருக்கட்டும்—உண்மைக் காங்கிரஸ் தோழர்தான்—என்ன எண்ணுவார்? ஆகா, நேரு பண்டிதரை முதல்வராகக்கொண்டிருக்கும் மந்திரி சபை எப்படிச் செய்தால் என்ன என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு கை தொழவா செய்வார்?

செய்தி வருகிறது—திருமதி விசயலட்சுமி தேவியார் இலண்டனில் இந்தியாவின் திருத்தூதராக இருப்பவர், என்னென்ன வழிகளில் பணத்தை விரையம் செய்துள்ளார் தெரியுமா?—என்பதாக. ஆண்டுதோறும், சர்க்காரின் கணக்குப் பரிசீலனை செய்யும் கமிட்டி, எஙகெங்கே என்னென்ன ஊழல்களும் மோசடிகளும் நடந்தன தெரியுமா என்று இருதினங்களுக்கு முன்பு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதனை வெளியிட்ட 'இந்து'—அனவரதமும் காங்கிரசின் புகழைப் பாடுகிற ஏடுதான் எனினும் எழுதுகிறது, "டில்லியிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறோம், நாம் செய்கிற அட்டகாசங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்கிற எண்ணத்துடன் வெளிநாட்டிலிருக்கும் இந்திய அதிகாரிகள் சர்க்காரின் பணத்தைக் கையாடும் கேடு, நமது வெளிநாட்டிலாகாவில் நிரம்ப நடைபெறுகிறது" என்பதாக.

உள்நாட்டில் பணமோசடி செய்பவர், பெரிய அதிகாரியாகிறார்! வெளிநாட்டில் பெரிய அதிகாரியாயிருப்பவருக்கு வேலையே பணமோசடி செய்வதுதானாம்!

இந்த இலட்சணத்தில், "நீங்கள் கொடுத்த தொகை போதாது, ஐந்தாண்டு திட்டத்தில் இன்னும் கொஞ்சம் பணம் கொடுங்கள்" என்று கேட்டால், ஏது என்று கையை விரிக்கின்றது, டில்லி. அந்த டில்லிக்காக வாதாடும் காங்கிரசுக்குத்தான், பொதுமக்களின் அபிமானமும் ஆதரவும் அதிகம் இருக்கிறதென்றார், காமராஜர்!

ஒரு தலைநகரம் கட்டினார்கள், மேற்கு பஞ்சாபில். ஒரு கோடி இரு கோடியல்ல ரூபாய் 13-கோடி செலவிட்டு தலைநகரின் பெயர் சண்டிகார். ஆனால் பஞ்சாப் மக்கள், இந்தத் தலைநகரம் எமக்குத் தேவையில்லை, பஞ்சாபுக்குப் பொருத்தமான தலைநகரம் பாட்டியாலாதான் என்று கிளர்ச்சி செய்து வருகிறார்களாம். பாட்டியாலா, ஒரு தலைநகரமாகயிருக்கும் வசதிகளை ஏற்கனவே கொண்டது! எனினும், புதியதொரு தலைநகரை ரூபாய் 13 கோடியைச் செலவிட்டு, கட்டிக் கொடுக்கிறது டில்லி! இங்கோ, புயலடித்த பிரதேசத்தைச் செப்பனிடவோ, இலட்சம் போதுமா, பத்து இலட்சம் போதுமா என்று கணககுக் கேட்கிறது. இப்படிப்பட்ட டில்லியைத் தாங்கும் காங்கிரசின் மீதுதான் அபிமானமும் அன்பும் பெருகுகிறதாம், மக்களுக்கு! கூறுகிறார், காமராஜர்!

இந்த எட்டாண்டு ஆட்சிக் காலத்தில் எத்தனை முறை நேரு பண்டிதர் கராச்சிக்குப் பறந்திருப்பார், பாகிஸ்தான் தலைவர்களுடன் விருந்து அருந்தியிருப்பார், இருந்தும் பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவுக்கு வரவேண்டிய ரூபாய் முன்னூறு கோடியில் ஒரு தம்பிடிகூட இன்றளவும் வசூல் செய்யவில்லையாம், இவர்கள். இநத 300 கோடி கிடைத்தால், நமது பூபாகத்துக்கு எவ்வளவோ நன்மைகள் தேடிக்கொள்ள இயலும்! டில்லியின் ஆட்சி அழகு, இப்படியிருக்கிறது! இப்படிப்பட்ட, ஆட்சியைத்தான் மக்கள் அபிமானத்துடன் ஆதரிக்கிறார்களாம். சொல்கிறார், காமராஜர்.

*

பம்பாய் ஊழியருக்கும், காங்கிரஸ் தலைவருக்கும், மக்கள் மன்றத்தில் தமது ஆட்சியாளர்களின் திறமைக் குறைவால் ஏற்பட்டிருக்கும் ஊழலின் விளைவாக, காங்கிரஸ் எவ்வளவு சீர்கெட்டிருக்கிறது என்பது விளங்குகிறது.

அந்தச் சீர்கேடுகள் களையப்பட்டு, உத்தமர்கள் இரத்தம் சிந்தி வளர்த்த அந்த இயக்கம உருப்பட வேண்டுமே என்கிற கவலை — அவர்கள், மந்திரிகளாயில்லாமல்; கட்சி அலுவலிலிருக்கிற காரணத்தால்—ஏற்படுகிறது.

காமராஜர் போன்றாருக்கோ, கட்சியின் புதுவாழ்வைவிட, எப்படியாவது அதன் பழைய வாசனையைக் காட்டி மேலும் மேலும் தேர்தல்களை நடத்த முடியாதா, என்கிறஆசை துடிக்கிறது, அதனால்தான், சரக்கின் மேன்மையைப்பற்றி, விளம்பரம் செய்கிறார்! ஊர்ஊருக்கும் சென்று, இப்போதே, 'வலை'யும் வீசுகிறார்.

ஆனால், பரிதாபம், அவருடைய கூற்றுககு எதிர்மாறாக, காங்கிரசின் சீர்குலைவைக் கண்டு உண்மைக் கட்சிக்காரர்களே கண்ணீர் வடிக்கின்றார்கள். அவர்களுக்குத் தெரியும், காங்கிரஸ் எவ்வளவு வேகமாகக் கரைந்து கொண்டிருக்கிறதென்கிற உண்மை. அவர்களைத் திருப்திப்படுத்த, நாடி வைத்யனைப்போல, 'நாலு' நல்ல வார்த்தைகளைச் சொல்லிவைப்பதால்—காங்கிரசும் தேறுது எண்ணமும் ஈடேறுது.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முனனதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

நிர்வாகி


தி. மு. க. 2-வது மாநில மாநாட்டு
முகப்புப் படங்கள்
இதுவரை வெளிவராத விதங்களில்
அண்மையில் எடுத்த
தி. மு. க. தலைவர்களின்
படங்களும், கிடைக்குமிடம்:—
பாண்டியன் புகைப்பட நிலையம்,
திருச்சிராப்பள்ளி.

# ஊர்வலம்

['ஞானக்கண்' பேட்டி]

"வினோபா அவர்களே!" என்று கூவிக்கொண்டு, அவருக்கென அழகாக அமைக்கப்பட்டிருந்த குடிலுக்குள் புகுந்தேன். என்னை உற்றுப்பார்த்துவிட்டு, 'யார்?' என்றார், அவர். "காஞ்சிவாசிதான்!", என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, "இங்குவந்து உண்ணாவிரதம் இருக்கிறீர்களே, என்ன காரணம்?", என்றேன். அதுபற்றித்தான் விளக்கங்கள் அளித்துள்ளேனே, பத்திரிகைகளில் வந்துள்ளதே என்றார். படித்தேன், ஆனால் அது தவிர வேறு காரணமும் இருப்பதாகப் பேசிக்கொள்கிறார்களே!—என்றேன். கொஞ்சம் கவலையோடு, என்னைப்பார்த்து, 'மக்களுக்குமா தெரிந்துவிட்டது?', என்றார். சர்வோதயத்திற்கு வந்த பணக்காரர்கள், செலவழிந்த பணம், அவர்களது போக்கு முதலியவைகளைப்பற்றி ஊருக்குத் தெரியாது என்று கருதுகிறீர்கள், என்றேன். 'கரையான் புற்றெடுக்க...!', என்று அருகிலிருந்த யாரோ ஒருவர் ஆரம்பிக்க, வினோபா அவர் பக்கம் திரும்பி, பேசாமலிரு என்று கையமர்த்தி விட்டு மௌனமானார்!

அங்கிருந்து கிளம்பி பத்தாயிரம் செலவிட்டு குளிர் அறை வசதியும், புது அரண்மனை போலவும் ஆக்கப்பட்டிருந்த கட்டிடத்துக்குள் தங்கியிருந்த இராசேந்திர பிரசாத்திடம் சென்றேன். அப்பப்ப! எவ்வளவு போலீஸ் பாதுகாப்பு என்கிறீர்கள். என்னைக் கண்டதும் அவரும், 'நீ யார்?' என்றார். "நான் ஒரு தி. மு. க!", என்றேன். "வா,வா! நானும் ஒரு தி. மு. க. வைச் சந்திக்க வேண்டுமென்றுதான் அதிகாரிகளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்" என்றார். "ஆமாம்! சி. வி. எம். அண்ணாமலையும், அரங்கண்ணலும் வந்திருப்பார்களே உங்களிடம்" என்றேன். ஏனெனில், அவர்களிருவரும் பிரசாதின் அழைப்பின்படி போய்ச் சந்திக்கப் போவதாக நான் கேள்விப்பட்டிருந்ததால், இப்படிச் சொன்னேன். அவரும், "ஆமாம், எனக்கு உங்கள் கழகத்தைப்பற்றி நிறைய தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசை. யாரை விசாரித்தாலும் ஏதேதோ புரிந்ததும் புரியாததுமாகச் சொல்லுகிறார்கள். அதனால்தான் ஆசைப்பட்டேன் ஆனால்......", என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் திணறினார். அதற்குள் அவரது டாக்டர் வந்து, 'நீங்கள் பேசக்கூடாது. ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றேனே,' என்றார். டாக்டரை விசாரித்தபோது, பிரசாத் 'ஆஸ்துமா' வியாதியால் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், அதிலும் காலையில் 24 படிக்கட்டுகளுக்குமேலேறி காஞ்சிவரதரைச் சேவித்ததால் வியாதி அதிகமாகி தொந்திரவு கொடுப்பதாகவும் சொன்னார். கொஞ்சம் வருத்தத்தோடு கிளம்பிய என் காதில், "ஆண்டவனிடம் உண்மையான பக்தி செலுத்தினால் அவன் உங்கள் வீட்டை நாய் மாதிரி காவல் காப்பான்; திருடன் உள்ளே புகாமல் தடுப்பான்; உங்கள் வாழ்க்கையும் நன்றாக அமையும்", என்கிற வார்த்தைகள் விழுந்தன. யார் பேசுவது, என்று நோக்கினேன்! சென்னை_ தக்கர் பாபா கல்விக் கூடத்தில் ஆச்சாரியார், இவ்வண்ணம் பேசிக்கொண்டிருந்தார். அவரைச் சந்திக்க வேண்டுமென்று ஆசை பிறந்தது! ஆசாமி, கொஞ்சம 'குஷி'யாயிருந்தார். என்னைக் கண்டதும், 'நீ இங்குமா வந்துவிட்டாய்?' என்றார். 'வரக்கூடாது என்கிறீர்களா?', என்றேன், "சேச்சே! வா, வா, உன்னைப்போன்ற தி. மு க. வினர் எத்தனை பேர் வந்தாலும், என் வீடு திறந்திருக்கும்," என்றார். ஏது இவ்வளவு அன்பு சுரக்கிறது, என்று கருகியபடி திகைத்தேன் நான்! "தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரிக்க மதுரையில் ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்களே தெரியுமா, உனக்கு. பல காங்கிரஸ் தலைவர்கள் இருக்கிறார்கள்,கமிட்டியில். தொண்டர்களையும், பிடித்துப் போடச் சொல்லியிருக்கிறேன். மதுரைக்குக்கூட நான் போகப் போகிறேன்" என்றார். "எதற்கு, அவர்களுக்கு உற்சாக மூட்டவா?", என்றேன் நான். "அதற்கு நானா போகவேண்டும். ராமநாதபுரம் சேதுபதியும் சுப்பிரமணியமும் இல்லையா? மதுரையில் பி. டி. இராசன் நடத்தும் தமிழ்ச் சங்கப் பொன் விழாவில் போய்க் கலந்துகொள்ளப் போகிறேன். அங்கு திராவிட நாடு பற்றியும் பேசப் போகிறேன்." என்றார். "திராவிட நாடு பற்றியா?", திகைப்புடன் கேட்டேன், நான். "ஏன்? நீங்கள் கேட்கும் திராவிட நாட்டுக்கும், தட்சிணப் பிரதேசத்துக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது. நீங்கள் வடநாடு கூடாது என்கிறீர்கள். அது தவிர வேறு என்ன வேற்றுமை?", என்றார். நான் பதில் பேசவில்லை, 'நம்நாடு' இதழில் வந்திருந்த, "அது வெண்ணெய்! இது சுண்ணாம்பு!", என்ற விளக்கத்தைக் காட்டிவிட்டு, கிளம்பினேன், காஞ்சிக்கு.

சர்வோதயபுரத்தில் மந்திரி சுப்பிரமணியம் எதிர்ப்பட்டார்' அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "என்ன ஜீ" என்றேன். "ஜீயாவது! சீயாவது! போப்பா......" என்று கோபமும் சலிப்பும் கலந்த குரலில் கூறிவிட்டு, காரில் ஏறப்போனார். அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருந்த நிருபர் ஒருவரைப் பிடித்து "என்ன காரணம்? ஏன் இவ்வளவு கோபமாக இருக்கிறார்?" என்று கேட்டேன், "சர்வோதயபுரத்தில் நிகழ்ந்த சங்கதி உனக்குத் தெரியாதா?" என்றார். ஆதாரக் கல்வி மாநாடு துவங்கியபோது, வரவேற்புக் கமிட்டித் தலைவரான சுப்பிரமணியம், எல்லோரையும் வரவேற்று தமிழில் பேசினாராம்! அதைக் கண்ட வடநாட்டுப் பிரதிநிதிகள் எல்லாம் எழுந்துபோகத் தொடங்கினார்களாம்!! நிருபர், அதைச் சொன்னதும், "இந்தச் சம்பவம் ஆவடியில்கூட நிகழ்ந்ததே!" என்றேன், "ஆமாம்" என்றார் நிருபர். அதோடு இன்னொன்றும் தெரிவித்தார், ஆயாசத்துடன். இவர் தமிழில் பேசியதைக் கண்ட வடநாட்டுக்காரர்கள் சலசலப்புக் காட்டினார்களே, சர்வோதயபுரத்தில் நடைபெற்ற சகல நிகழ்ச்சிகளும் எம்மொழியில் நடைபெற்றது தெரியுமா? இந்தியில்! இதை, ஏனையவர்கள் எல்லாம் சகித்துக்கொண்டுதானிருந்தார்கள்—தெரியுமா?

(18-ம் பக்கம் பார்க்க)

# வெகுண்டெழுந்தான் பிள்ளை

**(1)**

**தம்பி,**

**நான் உண்மையைப் போல் கர்ண கடூரமாய் இருப்பேன்.**

**நீதியைப்போல் நெறி பிறழாதிருப்பேன்.**

**ஒப்புக்குநடிக்கமாட்டேன், உண்மையாகவே உழைப்பேன்.**

**இரண்டுபடப் பேசேன், சாக்குப் போக்குக் கூறேன்.**

**அதனால் நான் கூறுவதற்கு யாரும் செவி சாய்க்காமலிருக்க முடியாது!**

ஏ! அப்பா! எவ்வளவு ஆணவம் ஒலிக்கிறது — இவர் பேசுவாராம், கேட்டே தீருவோமாமே! எத்துணை அகம்பாவம்!

செவிக்கு இனிமைகூட இருக்காதாம் — எனினும் இவர் பேசுவதை ஒருவரும் தள்ளிவிட முடியாதாமே! அதென்ன 'மாய சக்தி'யோ!

பேசட்டும், பேசட்டும், நா உலரும் வரையில் பேசிக்கொண்டே இருக்கட்டும் — நாம் இவர் பேசுவதை எப்படியும் கேட்டே தீருவோம் என்று நம்பிக்கொண்டு, நப்பாசை கொண்டு பேசிப் பேசிப் பிறகு கேட்பாரில்லை, மதிப்பார் இல்லை, என்பதை உணர்ந்து, வெட்கித்தலை குனியட்டும், வேதனைப் படட்டும். இவர் பேசுவாராமே! கேட்டே தீருவராமே! பார்ப்போம், பார்ப்போம்.

குழலாயினும் யாழாயினும், காதலைக் குழைத்தளிக்கும் கீதமேயாயினும், விருப்பமில்லை என்றால் கேளாமல், பலர் தம் அலுவலைக் கவனித்துக் கொண்டுபோய்விடக் காண்கிறோம்.

வேலை மிகுதியிருந்தாலோ, வேதனை ததும்பிடும் நிலையிலிருந்தாலோ, வித்தகர் பேசுவதைக் கூட வேம்பென ஒதுக்கிடக் காண்கிறோம்—இகத்தில் இன்பமும் பரத்தில் பேரின்பமும் பெற்றிடும் மாமந்திரமோ இவர் எடுத்துரைக்கப்போவது—எப்படியும் செவியில் வீழ்ந்துதீருமாமே! ஆளைப்பார் ஆளை! கர்த்தர் அனுப்பிய தூதுவரோ, நாம் கவனியாமலிருந்தாலும், தானாக உள்ளத்தை ஈர்த்திட!


கர்ண கடூரமாகவே பேசுவாராம் —காதுகொடுத்தே தீருவோமாம்!!

தம்பி! நான் பேசுவேன், நீங்கள் கேட்டே தீருவீர்கள் என்று கூறிய ஒரு பெரியவர்பற்றி, பேதைகளல்ல — மேதைகளென்ற புகழணி கொண்டோர் கூட இவ்விதம்தான் ஏளனம் பேசினர், எனினும் இறுதியில், அவர்களல்ல, உள்ள உறுதியைத் தம் உரை மூலம் காட்டிய **வில்லியம் லாயிட் காரிசன்** எனும் உரிமைப் போரார்வம் கொண்ட பெரியவர்தான் வென்றார்! அமெரிக்கா அவர் பேச்சைக் கேட்டது—எழுத்தைப் படித்தது—எண்ணத்தை ஏற்றுக்கொண்டது—சட்டமே இயற்றிற்று அவர் கோரிக்கையை நிறைவேற்ற!

இத்தனைக்கும் அவர் பிறப்பு—இறப்பு என்பதிலே தொக்கி நிற்கும் மர்மத்தை விளக்கிடும் தத்துவம் பேசவில்லை.

மரணத்துக்குப்பின் ஜீவன் உண்டா! இங்கு மரித்தவன் பிறகு எங்கேனும் செல்கிறானா? அங்ஙனமாயின், எங்ஙனம்? வடிவம் உண்டா? தனியானதோர் வாழ்வு உண்டா? என்ற கேள்விகளைக் கிளப்பி விடைகளை அளித்திடும் 'வித்தை'யைச் செய்து காட்டினவரல்ல. அருளாளரல்ல!! மனித உரிமை மதிக்கப்படவேண்டும், மிதிக்கப்படக் கூடாது என்ற ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளம் படைத்த ஒரு சாமான்யர்! அமெரிக்காவில் தலைவிரித்தாடிய 'அடிமை வாணிபத்தை'—அடிமை முறையைக் கண்டித்தவர் — மக்களிடம் பேசினார், செவியில் விழவில்லை — இதழ்களில் எழுதினார், எவர் கண்களிலும் படவில்லை! முச்சந்திகளில் நின்றுகொண்டு சத்தற்ற விஷயம்பற்றிச் சுவை சொட்டச் சொட்டப் பேசி இரசித்திடும் வம்பளப்போர் கூட, இவன் யாரடா வரட்டுக் கூச்சலிட்டுக்கொண்டு வாட்டுவதைக் கிறான்! — என்றுதான் எள்ளி நகையாடினர்.

[15-பக்கம் பார்க்க]



# கொள்கை வீரன்

[மா. கி. தசரதன்]

—பழநி—

இங்கிலாந்து நாட்டில் விக்ளிப் கற்றுக்தந்த அறிவுவிளக்கு, செர்மானிய நாட்டுச் சிந்தனையாளன் மார்ட்டின் லூத்தரைச் சென்றடைவதற்கு முன்னர் அந்த அருவிளக்கின் திருவொளி மதம் என்னும் பெருங்காற்றில் ஆடி அணைந்து விடாமல் பாதுகாத்துத் தந்தவன் பொகிமியா நாட்டுப் பெருவீரன் ஜான் ஹஸ் ஆவான். பகுத்தறிவின் பாதையில் முதன் முதலில் ஆணவத்தின் கொடுந் தண்டனைக்கு ஆளாகி அல்லற்பட்டு துடிதுடித்து அணுவணுவாகச் செத்துச் சாம்பல் ஆகியவன் ஜான் ஹஸ். ஆம்! கொண்ட கொள்கைக்காக ஹஸ் கொடுத்த விலை சாதாரணமானதல்ல, அறிவின் தெளிவை எல்லாம் எடுத்துப் பரப்பிவந்த அந்த ஒப்பற்ற உருவத்தினை ஒன் எரியின் செந்நாக்குகள் சுவைகண்டன இறுதியில்.

இளமைமுதல் எழுச்சியான மூளை வளம் கொண்டிருந்தவன் ஹஸ். கி. பி. 1369-ஆம் ஆண்டு பிறந்தவன் 1396-ம் ஆண்டிற்குள் பல்கலைக் கழகப் பட்டங்கள் மூன்றினைப் பெற்று 1398-ம் ஆண்டில் தேர்வுக்குழுவிலும் இடம் பெற்ருன்.

அந்தக் காலத்தில் ஏறத்தாழ எல்லா இளைஞர்களும் கற்று முடித்ததும் மதத்துறையில்தான் அடி எடுத்துவைத்து வாழ்க்கையைத் தொடங்கினர். மடங்களில் செல்வம் குவிந்துகிடக்க, செங்கோல் அவற்றினுக்குத் தலை தாழ்ந்து கிடந்தன; மக்களும் மனம் அடங்கிக் கிடந்தனர். அந்த வழியைப் பின்பற்றி ஹஸ்ஸும் மதகுருவானன்; மனம் உவந்து பாடுபட்டான் மார்க்கத்துறையில். பட்டபாடுகளால் மாபெரும் மதிப்பும் பெற்ருன்—சிறந்த ஒரு இடம் இவனுக்கு ஆயிற்று.

அறியாமையும் அச்சமும்மக்கள் மனதைதமாய்த்து அலக்கழித்து விடுகின்றமையால் அதனையேசிலர் தங்கள் மூலதனமாகக் கொண்டு ஏய்க்கும் தொழிலில் இறங்கிவிடுகின்றனர்.

தீராத நோயினுல் தொல்லைப் பட்டு நிம்மதி பெற இயலாத நிலையில் காரண காரியம் காட்டும் மருத்துவரின் சொற்களை விட தொடர்பின்றிப் பேசிடும் மந்திர

> சீர்திருத்தம் வேண்டியமைக்காக, மதவாதிகளால், சாகடிக்கப்பட்ட உத்தமர்கள் அநேகம். அவர்களில் ஒருவர், ஜான் ஹஸ்.

வாதியின் சொற்களே பலரிடம் மதிப்பைப் பெறுகின்றன. கடல் நடுவில் உடைபட்ட கலத்தில் உளம் தடுமாறுகின்றவன் துரும்பு கிடைத்தால் கரையேறிவிடலாம் என நப்பாசைகொள்வதுபோல் துயரக் கடலில் சிக்கித் தொல்லைப்படுவோர் மந்திரத் துரும்பு மகிழ்ச்சிக் கரைசேர்க்கும் என எண்ணித் தடுமாறுகின்றனர்.

அதனுல்தான் நாட்டில் எத்துணையோ மருத்துவ நூல் வல்லார்கள் இருப்பினும் அடிக்கடி 'தீராத நோயை எல்லாம் தீர்த்து வைக்கும்' "நேபாள பாபாக்கள்" தோன்றுகின்றனர். இத்தகைய நிலை மேற்கு நாடுகளிலும் பண்டு பலமுறை நேர்ந்திருக்கின்றது.

கி. பி. 1405-ஆம் ஆண்டில் விட்டன்பர்க் என்ற இடத்தின் அண்மையில்ஒரு சித்துக்காரன் உளான் எனும் செய்தி காட்டுத் தீபோல் பரவியது. 'அவன் தொட்டால் போதும் தொலையும் பாபம்' என்று பேசியவர்களின் சொற்களை நம்பி அறியாமை இருளில் அழுந்திக் கிடந்த மக்களின் தொகை அங்கே குவியத் தொடங்கியது. மக்கள் கூட்டம் ஏசுவின் பிரதிநிதி எனக் கூறிய மதகுருவைவிட்டு மாயக்காரன் பின் போகவே, அதைப் பற்றிய உண்மைகளை அறிய வேண்டும் என அவருக்கே அக்கறை பிறந்தது. அதிலே உண்மை இருக்குமோ என்று ஐயுற்ற உடன் உண்மை தெளிய வழிகண்டார் ஹஸ்ஸின் தலைமையில் ஒரு குழுவை அனுப்பினுர் அங்கே.

ஆற்று நீரோட்டம்போல், மாறுதலின்றிப் போய்க்கொண்டிருந்த ஹஸ்ஸின் வாழ்க்கையில் இது ஒரு திருப்புமையம் எனலாம். தூங்கிக்கிடந்த சிந்தனையைத் தட்டி எழுப்பி இயன்ற பணிக்கு இந்த நிகழ்சி பயன்பட்டது.

மதம்—மக்களுக்கு நன்மை செய்யும் என எண்ணி அந்த எண்ணத்தினை நம்பி அத்துறையில் உழைத்து வந்த ஹஸ், மதம் மக்களுக்கு இழைக்கும் கேட்டினை உணர ஒரு வாய்ப்பளித்தது அவருடைய விட்டன்பர்க் பயணம்.

அங்கு சென்று வந்ததும் கண்டு உணர்ந்தவைகளைத் தொகுத்து 'விட்டன்பர்க் சித்துக்கள்' பொய்யானவை என 'ரிபோர்ட்' அனுப்பினுர் அதனுல் பொகிமியாவினின்றும் விட்டன்பர்க் சித்துக்களுக்கு யாத்திரை போவது சட்டவிரோதமாக்கப்பட்டது.

ஏசு என்றேனும் ஒரு நாள் மீண்டும் இந்த மண்ணில் மனித உடலில் வருவார் என்று இன்றும் சில கிருத்தவர்கள் நம்புகின்றனர் எனில் பதினைந்தாம் நூற்றாண்டில் இந்த நம்பிக்கை எந்த அளவில் இடம் பெற்றிருக்க வேண்டும்? அந்தக் காலத்திலேயே "ஏசுவை அவருடைய சொற்களிலும் கொள்கைகளிலும் காணவேண்டுமே தவிர, எலும்பும் சதையும் கொண்ட சடலத்தில் காண நினைந்து ஏமாறக்கூடாது." என்று அந்த நூலில் ஹஸ் குறித்துள்ளார்.

மதத்துறையில் ஈடுபட்டுள்ள மத குருமார்களுக்கே மார்க்கம் போதிக்கும் பணியில் ஹஸ்ஸை நியமித்திருந்தனர் என்றாலும் ஒரு சிலர் இவர் விக்ளிப்பின் கொள்கைகளை ஆதரிக்கின்றார் எனக் குற்றம் சாட்டிப் போபபிடம் முறையிட்டனர்.

உரோம் நாட்டிலிருந்த போப் அக்குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டு இவரை மதகுரு பீடத்தினின்றும் விலக்கிவிட்டார், ஹஸ் இட்ட முறையீடு பயனின்றிப் போயிற்று,

இந்த நிலையில் பொஹீமியா நாட்டில் போப்பின் செல்வாக்கைக் குறைப்பதற்கான முயற்சிகளும் சில இடங்களில் உருவாகி வந்தன. இந்த சூழ்நிலை ஹஸ்சுக்குச் சாதகமாக இருந்தது.

போப்பை எதிர்க்கும் வகையில் இப்படி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகையில் எரிகின்ற தீயில் எண்ணெய் இடுவதுபோல மத குருமார்கள் இவர்கள் எதிர்ப்பு வளரும் வகையிலே சில செயல்களில் ஈடுபடலாயினர்.

கி. பி. 1409 ஆம் ஆண்டில் விக்ளிப்பின் நூல்களைக் கண்டித்து அவற்றைத் தடையும் செய்தனர். இதுமக்களின உணர்ச்சியலைகளைத் தூண்டி விட்டதுமன்றிப் பெரியதொரு எதிர்ப்புக்கும் வழிகோலியது. தடையை நீக்கவேண்டும் என்று ஹஸ் எழுப்பிய குரல் வெற்றொலியாகப் பலனன்றிப் புறக்கணிக்கப் பட்டது, அதோடன்றி அதற்கடுத்த ஆண்டு ஜூலை மாதம் இருநூற்றுக்கும் மேற்பட்ட விக்ளிப்பின நூல்களைப் பொதுவிடத்தில் குவித்து எரியூட்டினர் மதவாதிகள். மீண்டும் தடை நீக்கப்படாதது மட்டுமின்றி 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத்தாழ்' என நம் நாட்டில் வழங்கும் பழமொழியைப் போல் விக்ளிப்பின் நூல்களின மீதிருந்த தடையைப் புதுப்பித்தனர். அதற்கடுத்த ஆண்டில் ஹஸ்ஸை மடத்திற்கு அடங்காத பிள்ளை என ஒதுக்கிவைத்து, அவருக்கு உதவி அளிப்போர்க்கும் இதுவே தண்டனை என்றனர். இதனால் மக்கள் அஞ்சி அடங்கிவிடுவர் என எண்ணினர். ஆனால் மக்களோ ஹஸ்ஸிற்குப் பேராதரவு நல்கினர். அந்த ஆதரவு மதகுருமார்களை மதிக்காத அளவிற்குச் சென்றது. 1411 ஆம் ஆண்டில் இறந்த மத குருக்களின் தலைவர் ஒருவருடைய ஈமச் சடங்குகளுக்கு மக்கள் யாரும் செல்லாத அளவிற்கு அந்த ஆதரவுவளர்ந்தது. நிலைமை இப்படியே வளர்ந்து விட்டால் தனது பதவியும் அதிகாரமும் தளர்ந்துவிடும் என்பதனை உணர்ந்த போப் தன் பிரதிநிதி ஒருவரைப் பொஹீமியாவின் தலைநகருக்கு அனுப்பிவைத்தார். மதச்சண்டை ஒன்றை லேடிஸ்லேன் மன்னனுடன் தொடங்கினார். தன் பக்கம் சேருவோருக்குப் பாபமன்னிப்புக் கிடைக்கும் என்று ஆசைகாட்டினார், ஹஸ் இவற்றை எதிர்த்தவராய்த் தனியாக ஒதுங்கிநின்றார். மக்கள் போப்பையும் அவர் உத்தரவுகளையும் எதிர்க்கும் வகையில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். போப்பின் பிரதிநிதியும் தன பங்கைச் செய்யத்தவறவில்லை ஹஸ்மீது இருந்த தடையைப் புதுப்பித்ததோடன்றி ஹஸ் தங்குவதற்கு யாரும் இடந்தரக் கூடாது எனக்கட்டளை இட்டார். 'தலைநகரை விட்டுச் சிறிது காலம் வெளியேயேறுக' என மன்னனும் கேட்டுக் கொள்ளவேண்டிய நிலைவந்து விட்டது. வேறு வழியின்றி ஹஸ் வெளியேறினார்.

அடக்குமுறைதன் கொடுங்கரத்தின வல்லமையால் சிந்தனையாளனை விரட்டியது என்றாலும் அது ஒருவகையில் அவருக்கு நல்ல பலன் தந்தது எனலாம். வெளியூரில் இருந்தபோதுதான் ஹஸ் தனது சிந்தனைக் கருவூலம் எனத்தகும் அரிய நூல் ஒன்றினை எழுதி முடித்தார். பின்னாளில் மதவாதிகள் இவர்மீது குற்றம் சுமத்துவதற்கு இந்நூலினின்றுதான் மேற்கோளகளை ஆதாரங்களாகக் காட்டினர்.

பொஹீமியா விவகாரங்களைப் பற்றி விவாதிப்பதற்கு ஹஸ் இருக்க வேண்டிய வேலை வந்துற்றபோது செர்மனியில் இருந்த கான்ஸ்டன்ஸ் நகருக்கு வருமாறு கட்டளை பிறந்தது.

1414 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள, 14 ஆம நாள் ஹஸ் பொஹீமியாவினின்றும் கான்ஸ்டன்ஸ் நகருக்குப் புறப்பட்டார்.

வழி நெடுகிலும் மக்களிடை நல்ல வரவேற்புகளைப் பெற்ற வண்ணம் நவம்பர் 3 ஆம் நாள் ஹஸ் கான்ஸ்டன்ஸ் நகர் சென்றடைந்தார்.

வந்த வழிநடந்த களைப்பு கூட தீர்ந்திருக்காது; தனமீது என்ன குற்றத்தை எவ்வகையில் சொல்லப் போகிறார்களோ என்று எண்ணிக் கிடந்திருப்பர். ஆனால் அதே திங்கள் 28 ஆம நாள் அவரைத் திடுமெனப் பிடித்துச் சிறையில் தள்ளிவிட்டனர். குற்றம் எதுவெனவும் குறிப்பிடவில்லை.

இவரைப் பிடித்துச் சிறையில் தள்ளியான பிறகு மததருமார்கள் தங்கள் 'விசாரணை'யைத்தொடங்க முயன்றனர். டிசம்பர் திங்கள் 4 ஆம நாள் இவர் மீது இருந்த குற்றஙகளை ஆராய ஒரு குழுவை நியமித்தார் போப். அக்குழுவில் தனது பிரதிநிதியும் ஒருவர் இடம் பெறவேண்டும் என ஹஸ் கேட்டதற்கு முதலில் ஒபபுதல் தந்து பிறகு மறுத்துவிட்டனர்.

எனினும் இக் கொடுமைகளை எல்லாம சகித்துக்கொண்டு விசாரணை நாள் வரட்டும் எனக் காத்திருந்த ஹஸ்ஸிற்கு ஒருபெரிய ஏமாற்றமே காத்திருந்தது எனலாம். தன்மீது சாட்டப்பெற்ற குற்றங்களை மறுத்து அவற்றிற்கான காரணங்களைக் காட்டத் தொடங்கினார் ஹஸ்; மேலேபேச இயலாதவாறு கூச்சலைக் கிளப்பிக் குழப்பம் உண்டாக்கிவிட்டனர், மதவாதிகள்.

இதுபோன்ற கூட்டத்தில் நேர்மையும் உண்மையையும் நான் இன்னும் அதிகமாக எதிர்பார்த்து வந்தேன் எனக் கூறித் தன் பேச்சை முடிக்காமலே விடவேண்டியதாயிற்று ஹஸ்ஸிற்கு.

அதே திங்கள் 7-ஆம் நாள் மீட்டும் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அன்று மன்னனே நேரில் வந்திருந்தமையின் முதலில் கூச்சல் எழுப்பிக் குழப்பம் விளைத்தார்கள் வாளா கிடக்க நேர்ந்தது.

தான் செய்தன எல்லாம் தவறு என ஒப்புக்கொள்ள வேண்டின வேண்டுகோள் ஹஸ்ஸால் மதிக்கப்படவில்லை.

மீட்டும் மறுநாள் வழக்கை இன்னும் நுட்பமாக விசாரித்தது மன்றம். ஹஸ், தான் எழுதியவை எல்லாம் தவறுடையன என்றும் அவற்றை இனிமேல் வைத்திருப்பதோ பிறருக்குக் கூறுவதோ இல்லை என்று சூள் உரைக்க வேண்டும் என்றும், அவற்றை எல்லாம் பொதுவிடத்தில் தூற்ற வேண்டும் என்றும் கேட்டனர். ஆனால் ஹஸ் இணங்க மறுத்துவிட்டார்.

மறுத்துவிட்டார் என்பது மதவாதிகளுக்குப் பெரும் சினத்தைக் கிளறிவிட்டது. இவனை விட்டு வைத்தால் வேதனை வளரும் என எண்ணினர். எனவே தண்டனையைச் சொல்ல வேண்டினர் மன்னனை. மன்னன் சொன்னான் 'ஸ்டேக்'தான் இவனுக்கு மாற்று என்று.

'ஸ்டேக்' என்பது அந்தக் காலத்தில் வெகுவாகப் பயன்பட்டு வந்த ஒரு தண்டனை முறை. பொதுவிடத்தில் ஒரு மரத்தூண் நடப்பட்டிருக்குமாம்; தண்டனைக்குரியவனை 'ஸ்டேக்' என்று வழங்கும் அம்மரத்தில் பிணைத்துத் தீ மூட்டிவிடுவாராம் (உயிருடன் தான்) அவன் எரிந்து அணுவணுவாகச் சாவதைப் பிறரும் காணவேண்டும்.

'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்று போதித்த ஏசுமார்க்கத்தில்தான் 'ஸ்டேக்'! மனிதனை உயிருடன் எரிக்கத் தூண்டியவர்கள், எரித்தவர்கள் — மதகுருமார்கள் அவர்கள் ஆஸ்திகர்கள்—ஆனால் ஹஸ் மீது நாஸ்திகன் எனப் பழி.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' ஆனால் 'அன்பும் சிவமும் ஒன்றே' என்னும் சைவர்களே எண்ணாயிரம் சமணர்களைக் கழுவில் ஏற்றிச் சைவம் வளர்க்கவில்லையா? இவர்கள் உயிருடன் உடலைப் பிளந்தனர்; அவர்கள் உயிருடன் உடலைக் கருக்கினர். முறைவேறு; பலன் ஒன்று. இருவருக்கும் மதம் அன்பு போதிக்கின்றது!

மனிதனின் தனிச் சொத்தாகிய சிந்தனையைப் பயன்படுத்தியது தவறாகப் போயிற்று. 'ஸ்டேக்' மாற்றும் உன் எண்ணத்தை என்ற சொற்களைச் சொல்லியானபிறகு அந்த விசாரணை மன்றம் கவலை ஏதும்கொள்ளாது அன்றைக்குரிய மற்றவேலைகளைக் கவனிக்கத் தலைப்பட்டது. உலகத்து அறிஞர் ஒருவன் உயிர்குடித்தோமே என்ற கவலை அதற்கு எங்கிருந்து வந்திருக்க இயலும்?

இவர்கள் இழைத்த கொடுமை இத்துடன் அமைவதாகவும் காணோம். எரிக்கப்படவேண்டிய தூணில் ஹஸ்ஸைக் கொணர்ந்து கட்டிவிட்டார்கள். தீ கொழுந்து விட்டு எரிந்து தன் செந்நாக்குகளால் அவன் உடலைச் சுவைக்க வேண்டிய விறகுகளையும் சுற்றிலும் அடுக்கிவிட்டனர். அந்த நிலையில் கொடுமனத்தவர்கள் ஹஸ்ஸை அணுகி இறுதி முறையாகக் கேட்கின்றார்கள் "சாகும் முன்னாவது சிந்தித்துப் பார்! செய்தது பிழையே என ஒப்புக்கொள் விடுதலை கிட்டும் பிழைத்துப்போவாய்; வீண் தொல்லை ஏன்?" என்று.

கொண்ட கொள்கைக்காக உயிரையும் பலியிடத் துணிந்துள்ளான் முன் கேட்கின்றனர், இப்படி. உயிர் தித்திப்பை எண்ணி அவன் உள்ளத்து உணர்வுக்குத் திரையிட்டு மூடிவிட்டு இவர்கள் உவக்கும் வகை உதடுகள் அசைப்பான் என மனப்பால் குடித்தனர். ஆனால் அந்த குணக்குன்று உயிரை விலைபோட்டுப் பேசுகின்ற நேரத்திலும் 'உள்ளம் எண்ணியது மறுக்கேன்' என்பான்போல அவர்கள் வேண்டுகோளை வெற்றுரை என ஒதுக்கித் தள்ளிவிட்டான். தள்ளியது மட்டுமன்றித் தன் கொள்கைகளில் தனக்கிருந்த பற்றை எடுத்துப்பேசினான். கடவுளுக்குத் தெரியும் நான் தவறானவைகளைக் கூறவில்லை என்று... நான் உண்மை எனக்கொண்டு இதுவரை எடுத்துச் சொல்லி வந்த கொள்கைகளுக்காக இப்போது மகிழ்ச்சியாகச் சாகிறேன்" எனக் கூறினான்.

கோபமும் எரிச்சலும் கொண்டோர் கொடுதீயை மூட்டினர். கொழுந்துவிட்டுப் படர்ந்த அந்த செந்நெருப்பு அவன் குரல்ஒலியை மெல்லமெல்ல விழுங்கி, மக்களிடை இதுவரை ஓடி ஆடி திரிந்து உயர்ந்த கொள்கைகளைத் தூவி வந்த உடலத்தையும், பிடி சாம்பலாகிவிட்டது. செந்தீயில் வெந்து மடிந்த சிந்தனையாளனின் சாம்பலும் அவன் நின்ற மண்ணும் கூட உணவு பெற்றுவிடும் என எண்ணினார்களாம் அந்த மதவாதிகள். அந்த மண்ணையும் சாம்பலையும் விட்டு வைத்தால் அதைப் பார்க்கின்ற மக்கள் 'என்ன கொடுமை' என்று எண்ணினால், அதனால் தங்களுக்குத் தீங்குவந்துவிடப் போகின்றதே என்ற அச்சமாகவும் இருக்கலாம். அதனால் அவற்றை அள்ளி எடுத்துச் சென்று 'ரைன்' நதியின் கரையில் கரைத்து விட்டனர்.

இத்தனைக்கும் ஹஸ் செய்த தவறுதான் என்ன? கட்டிவைத்து கொளுத்தப்பட வேண்டியதற்கு அவன் இழைத்த பிழை என்ன?

"விக்ளிப் ஒரு நாத்திகன்—ஹஸ் அவன் கொள்கைகளை ஆதரித்தான்" இதற்குத்தான் ஹஸ் தன் உடலை உயிருடன் விலையாகத் தர வேண்டி இருந்தது!

சாம்பலையும் மண்ணையும் கரைத்துவிட்டால் அவன் கொள்கைகள் செத்துவிடும் என்று எண்ணினார்களோ என்னமோ?

கி. பி. 1409-ல் விக்ளிப்பின் நூல்களைக் கொளுத்தியவர்கள் 1415-ல் விக்ளிப்பின் மாணாக்கன் போல் விளங்கிய ஹஸ்ஸைக் கொளுத்தினார்கள். ஆனால் (பாவம்!) அவர்கள் எங்கே அறிந்திருக்கப் போகின்றார்கள் இவர்கள் இட்ட தீ மார்ட்டின் லூத்தர் என்ற வெடி மருந்தைக் கிண்டிவிடப் போகின்றது என்பதனை!

'ஒல்லியான உடலில் எளிய உடுத்திய' மனிதனின் 46 ஆண்டுகளின் உயிரோட்டம் 'ஸ்டேக்'கில் வந்து ஓய்ந்தது! பகுத்தறிவின் பாதை கொஞ்சம் நீண்டது.

★

---

## பிறப்பு

திராவிடநாடு அலுவலகத் தோழர் டி. மாணிக்கம் அவர்களின் துணைவியார் தோழியர் வனசாட்சி 23—5—56 புதன்கிழமை அன்று பெண் மகவு ஈன்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

*

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ் முத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி ரஞ்சிதம் கடந்த 26—5—56 சனிக்கிழமையன்று மதுரை திரவியம் பிள்ளை ஆஸ்பத்திரியில் பெண் மகவு ஒன்றுக்குத் தாயானார்கள். தாயும் சேயும் நலம்.

# புத்தர் செய்த புரட்சி!

"அன்பு, சிவம் உலகத்துயர் யாவையும், அன்பிற்போடுமென்றே —இங்கு முன்பு மொழிந்து கொண்ட" புத்தனுக்கு இதர மத ஸ்தாபர்களைப் போன்றல்லாது உலக வரலாற்றில் தனி இடம் கொடுக்கப் படுகிறது. ஏன்? அவர் இல்லாத ஒன்றைக்காட்டி ஏமாற்றும் விந்தையை எதிர்த்தார். ஆத்மவாதத்தை வெறுத்தார். எல்லாம் நிலையானது என்ற சனாதன தர்மத்தை எதிர்த்து எதுவுமே நிலையானது அல்ல, மாறிக் கொண்டே இருப்பது தான் என்ற விஞ்ஞானம் அன்றே போதித்தார்! 'மனிதனுக்கு வாழ்வு கொடுப்பது அவன் செயல்களோ, தெய்வமோ, பூசாரியோ அவனைக் காப்பாற்றமுடியாது' என்ற தர்க்க இயல்வாதத்தை அன்றே அறைந்தார்! இவைகளை எல்லாம்விட புத்தரை போற்றி வணங்க வேண்டியபெருங்காரணம் ஒன்று உண்டு. அதுதான் புத்தர் இதர போதகர்களைப்போல. "அஞ்ஞானிகளே நான் ஆண்டவனால் அனுப்பப்பட்டவன். என்னைப் பின்பற்றி என் பின்னால் வாருங்கள், இன்றேல் நாசமாக போய்விடுவீர்கள்." எனக் கூறவில்லை. "யாரும் என்னைப் பின்பற்றவேண்டாம். என்னை ஒரு ஏணிப் படியாகக்கொண்டு என்மீதுஏறி மேலே போங்கள்" என்றார் புத்தர். தான் தான் ஆச்சார்யன் எனாது தன்னை படியாக பாவித்து வளைந்து கொடுத்தபெருந்தகையாளர் சத்வ குணபோதன்.

ஆசிய ஜோதி போதி கயாவில் பெற்ற ஞானவிளக்கை ஏந்தி நாடெங்கும் நடந்து அஞ்ஞான இருளை அகற்றி அன்புபோதித்தார். அவர் பெற்ற ஞான ஒளி என்ன? மனித குலத்திற்குத் துக்கம் தருவது பிறப்பு, இறப்பு, பிணி, மூப்புதான். ஆசைதான் துக்கத்தின் காரணம். துக்கத்தை தொலைக்க ஆசையை அகற்ற வேண்டும். அதனைஒழிக்க வேண்டுவது யாது? பகுத்தறியும் அறிவு, மனோதிடம், நல்ல பேச்சு, நல்ல செயல், நல்ல வாழ்க்கை, நன் முயற்சி, நல்லதையே கடைப்பிடித்தல், நல்லமைதி- இவைஎட்டுந்தான் நன்மார்க்கம் நாடும் வழி என நவின்றார். மாந்தருக்குள் நிலவிய பேதங்களைக் கண்டித்தார். எல்லோரும் சமம் என்ற புது யுகக் குரலை முழங்கினார். மூடக் கட்டுகளையும், முடைநாற்றக் கருத்துகளையும் தடையின்றிச் சாக்கடையில் கொட்டும்படி கூறினார். அருளாளன் பறையருக்கும், இங்கு தீயர் புலையருக்கும் விடுதலையுண்டு உன வீர முரசு கொட்டினார். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என ஆர்த்தெழுந்துக் கூவினார். அவர்களுக்கும் தமது சங்கத்தில் இடமளித்தார். வேதங்கள் எல்லாம் வெற்றுரைகள் என நவின்றார். அடிமைகள் கொலைசெய்தவர், ஏன் சட்டப்படி பிறக்காதவர்களையும் சங்கத்தில் சேர்த்து அவர்களுக்கு வாழ்வளித்தார் பூசாரிகளின் நுகத் தடியினின்றும் புத்தர் மக்களை விடுவித்தார். ஆவதும் அழிவதும்அவனாலே என்ற சோம்பேறி வாதத்தில் மூழ்கி, இருந்த மக்களுக்கு சுய அறிவு போதித்தார். அவனன்றி ஓரணுவும் அசையாது என ஆத்மவாதம் பேசிய மக்கள் மனதை அசைத்து அவர்களுக்கு அறிவு ஊட்டினார். கற்புநெறியை வற்புறுத்தினார். பொய், வஞ்சனை, மது அருந்துதல் முதலியவைகளை முதன்முதலாக எதிர்த்தார். கடுந்துறவை கண்டித்தார். பூஜை, புனஸ்காரம், சம்ஸ்காரம், சடங்கு, வேள்வி, வேதபாராயணம் முதலியவற்றை எதிர்த்தார். ஆண்டவன் பெயரால் ஆடு, மாடுகளை அழித்துத் தின்னும் அநாகரீகச் செயலைத் தடுத்து நிறுத்தினார். மூச்சடக்கிப் பேச்சடக்கி மூலக் கனலைக்கிளப்பி ஆலத்தையும் அமுதாக்கியுண்ணும் அதிசய யோகிகள் என்று புளுகிவந்த பல யோகிகளை மருட்டி விரட்டினார். செய்யும் தீமைகளை எல்லாம் செய்துவிட்டு கடவுள், மதம் என்ற பெயரில், 'அழுங்கள்ளர், தொழுங் கள்ளர்; ஆசாரக்கள்ளராய்' மக்களை ஏய்த்து வந்த சாஸ்திரிகள், பண்டிதர்கள், புரோகிதர்கள், ஆகிய விஷ விருட்சங்களை புயல் போலச் சாடினார். அவர்களை வாத தர்க்கமென்னும் அங்குசத்தால், குத்தி சாய்த்தார். "செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்பார் பித்த மனிதர், அவர் சொல்லும் சாத்திரம் பேயுரையாம்' என முழங்கினார்.

*

இன்று 2500 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த கருணை மூர்த்தியின் விழா எடுக்கப்படுகிறது. மகிழ்ச்சியடைய வேண்டியதே! ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் அதனை தனதாக்கிக்கொண்டு புத்தர் பெயரால் நடத்தும் கோலாகலம், வேடிக்கை, கூத்து, புத்தர் பார்வையில் ஆர்வம்கொண்ட அத்தனை பேரும் வெட்கி வேதனைப் படும் நிலையில் உள்ளது. எளிமையை போதித்த அந்த புனிதன் பெயரால் மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும் இந்தியாவெங்கும் கோடி கோடி கொட்டி செலவழிக்கிறது. இந்த விழாவை கொண்டாடுவதின் மூலமாக உலக அரங்கில் தங்கள் பெருமையை உயர்த்திக்கொள்ள நேரு, இராதாகிருஷ்ணன், 'ஹிட்லர்' சம்பூரணானந்த் கம்பெனி பல குறுக்கு வழிகளில் வேலை செய்கிறது. அன்று புத்தரை ஆண்டவனாக்கி அவரை அழிக்க முயன்ற கூட்டத்தின் வாரிசு இன்று மீண்டும் அந்தத் தயாளனை ஆண்டவனாக்கி சாதாரண மக்களை விட்டுப்பிரிக்க முயலுகிறது.

★

**புனிதராம் புத்தரின் விழா, இக்கிழமை உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திய அரசினரும், அரசில் செல்வாக்கு வகிக்கும் இந்துமத வைதீகர்களும், புத்தரையும் ஒரு அவதாரமாக்கிட முனைந்து பேசி வருகின்றனர். புத்தரும், மகாவீரரும் உருவாகக் காரணம் அக்காலப் பார்ப்பனீயக் கோட்பாடுகள் என்பதை எவரும் மறுக்கார்! புத்தரின் கொள்கைகளும், சமரச போதமும், யாரும் மறுக்க முடியாதவை யாகும், அவரை, இன்று உலகமே போற்றுகிறது. காரணம் என்ன? — இக்கட்டுரை, 'புது வாழ்வு' எனும் தேசீய ஏடொன்றில் 'ஒளி' என்பவரால் தீட்டப்பட்டதாகும். புத்தரைப் பற்றி, நாம் கூறினால் காய்வோர், இக்கட்டுரையைப் படிக்கட்டும்.**

# மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

### 1. அனுதாபம்

1953-ம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, அரசியலாரின் அடக்கு முறைக்கும், மாற்றுக் கட்சியினரின் வஞ்சகத்திற்கும் பலியாகி உயிர் நீத்தத் தோழர்களுக்கு இம்மாநாடு வீரவணக்கம் செலுத்திக் கொள்வதுடன், கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு மறைந்த தோழர்களுக்கும் இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

### 2. மே தின விடுமுறை

உலகப் பாட்டாளி மக்களின் உரிமைக்கு வித்திட்ட மகத்தான நாளாகிய மே தினத்தை, ஆண்டுதோறும் இந்தியத் துணைக்கண்டமெங்கிலுமுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் பொது விடுமுறையாக ஆக்குமாறு இந்திய அரசியலார் அதிகாரபூர்வமான உத்தரவிட வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### 3. கூட்டணித் தோழர்கள் மீதுள்ள வழக்குகள்

தமிழ் மக்களின் சர்வகட்சிக் கூட்டணி, கடந்த பிப். 20-ம் நாளன்று, மாநில புனரமைப்புப் பிரச்சினையில் தமிழர்களின் கருத்தை வலியுறுத்துவதற்காக மிக அமைதியான முறையில் பொது வேலை நிறுத்தம் நடத்தியும், சில இடங்களில் போலீஸ் அத்து மீறி அவசியமாக மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அடக்குமுறையை ஏவிவிட்டு மக்களை வருத்தியதை இம்மாநாடு கண்டிப்பதுடன். இது சம்பந்தமாக கடலூர், தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி, தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் ஆகிய இடங்களில் பல தோழர்களின் மீதும் தொடர்ந்துள்ள வழக்குகளைச் சர்க்கார் வாபஸ் பெறவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

### 4. விடுதலை பெற்ற நாடுகட்கு வாழ்த்து

அண்மையில் அன்னிய ஆதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலைபெற்ற வியட்னும், மலேயா, மொராக்கோ முதலிய நாடுகட்கு இம்மாநாடு மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் அன்னிய ஆதிபத்தியத்தை எதிர்த்தும், உலகெங்கும் ஆதிக்கக்காரர்களின் இனவெறியைக் கண்டித்தும், மனித உரிமைகட்காக நடைபெறும் கிளர்ச்சிகட்கு இம்மாநாடு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

### 5. இந்தியாவே, காமன்வெல்த்தை விட்டு வெளியேறுக!

'காமன்வெல்த்'தில் உறுப்பினராயுள்ள இந்தியா, அதிலுள்ள மற்ற நாடுகள் கடைப்பிடிக்கும் வெள்ளை நிறவெறித் திட்டங்களையும், அவைகள் இந்திய உபகண்ட மக்கட்கு எதிராக எடுக்கும் எதிர் நடவடிக்கைகளையும் ஒரு சிறிதும் தடுக்க முடியாமல், மேற்படி அமைப்புடன் இந்திய யூனியன் சர்க்கார் உறுப்பினராயிருப்பது, தன்மானக் குறைவு என்று இம்மாநாடு கருதுவதுடன், 'காமன்வெல்த்' நாடுகளின் மேற்படி தவறான போக்குகளைக் கண்டிக்கும் அறிகுறியாகக் 'காமன் வெல்த்'தை விட்டு இந்தியா உடனே வெளியேறிவிட வேண்டுமெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### 6. காஷ்மீர் பிரச்சினையில் முடிவு காணுக!

கடந்த எழு ஆண்டுகளாக இந்திய மக்களின் வரிப்பணத்திலிருந்து பெரும் அளவுப் பணத்தைச் செலவிட்டும். மற்றும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டும், காஷ்மீர் பிரச்சினையில் ஒரு முடிவைக் காணமுடியாத குழப்ப நிலையை வளர்த்துவரும் இந்திய அரசியலாரின் போக்கைக் கண்டிப்பதுடன், விரைவில் இப்பிரச்சினையில் ஒரு முடிவு காணுமாறு இந்திய அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### 7. இலங்கை வாழ் தமிழ் மக்கள் நிலை

இலங்கை வாழ் திராவிட மக்களுக்கு நியாயமான குடியுரிமை வழங்க, இலங்கையின் புதிய சர்க்காராவது ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்வதுடன். இந்திய அரசியலாரும் அதற்கான முயற்சிகளில் உடனடியாக ஈடுபடவேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

(அ) இலங்கை சர்க்கார் தமிழ் மொழியை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்க மறுத்தமை கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எவ்வித ஊறும் நேராவண்ணம், தக்க பாதுகாப்பு அளிக்குமாறு இலங்கை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வரும் தமிழர் இயக்கக் கோரிக்கைகளை மனமார வரவேற்பதோடு, அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று, புதிதாகப் பதவி ஏற்றுள்ள இலங்கை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(இ) தமிழரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்காக, இலங்கை ஹைகமிஷனர் பதவிக்கு ஒரு தமிழரையே நியமிக்கவேண்டும் என்று சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

### 8. ஆயுத பரிசோதனைகளை அறவே கைவிடுக

இரண்டாம் போருக்குப் பிறகு கடந்த பத்து ஆண்டுகளில், உலக அரசுகள், குறிப்பாக வல்லரசுகள் இருமுனைகளாகப் பிரிந்து நின்று, பலவித அமைப்பின்பேரால் இராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டு வருவது உலக சமாதானத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கும் என்பதையறிந்து இம்மாநாடு மிகவும் கவலையுறுகிறது.

இவ்வித இராணுவ ஒப்பந்தங்களுக்காக விரயமாக்கப்படும் எராளமான பணமும், பலமும், உலக மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களில் பயன்படுத்தும் முயற்சிகளிலும், உலகஅரசுகளனைத்தும் ஒன்று சேரும் வகையிலும், உலக அரங்கில், இந்திய அரசியலார் பெற்றுள்ள செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொள்வதுடன், உலகிற்கே பேராபத்தை விளைவிக்குமென உலகப் பெரும் விஞ்ஞானிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் அணு, நீர்வளி ஆயுதப் பரிசோதனைகளை அறவே கைவிடுமாறு வல்லரசுகள் அனைத்தையும் வற்புறுத்துவதுடன், இந்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

### 9. இரண்டாவது திட்டத்திலும் திராவிடம் வஞ்சிக்கப்படுவதா?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாட்டின் ஓரவஞ்சனை விளக்கப்பட்டிருந்தும் இந்திய அரசியலார் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும், திராவிடத்தைப் புறக்கணிக்கும் வகையில், கனரகத் தொழில்கள், மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவைகளை வடநாட்டிலேயே துவக்கத் திட்டமிட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

(அ) மூலப் பொருள்கள் கிடைக்கவில்லையென்ற காரணத்தைக் காட்டி தொழில் துறையில் திராவிடத்தைப் பின்தங்கவைத்திருக்கும் அநீதியைப் போக்க, மூலப் பொருள்களின் உதவியின்றியே துவக்கப்படக் கூடிய பல தொழில் திட்டங்களையாகிலும் திராவிடத்திலேயே துவக்கவேண்டுமென்று வலியுறுத்துவதுடன், திராவிடத்தில் புதைந்துகிடக்கும் இயற்

# பலகட்ட விற்பனை வரியை ரத்து செய்க!

கைக் கனிப்பொருள்களின் அளவுகளையும், அதன் வாயிலாக அமைக்ககூடிய தொழில்களைப் பற்றியும், ஆராய, குழு ஒன்றை நிறுவுமாறு அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

**10. தொழிற்சாலைகளும் பாங்கிகளும் தேசிய மயமாக்கவேண்டும்**

அண்மையில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கிய அரசியலாரின் முடிவை இம்மாநாடு வரவேற்பதுடன், இதைத் தொடர்ந்து தனிப்பட்டோர் வசமுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாப் பெருந்தொழிற்சாலைகளையும் பாங்கிகளையும் தேசியமயமாக்கி, அந்த நிறுவனங்களின் சொத்துக்களையும், வருவாய்களையும் அந்தந்த மாநிலங்களிலேயே பயன்படுத்திக் கொள்ள வேண்டுவது அவசியமென்பதை இம்மாநாடு அரசியலாருக்கு எடுத்துக்காட்டி அதற்கான செய்யுமாறும் வலியுறுத்துகிறது.

**11. ஒருமுனை விற்பனை வரி**

இப்போது இருந்துவருகிற விற்பனை வரியானது பொதுவாக ஏழை பாட்டாளி மக்களையும், விவசாய மக்களையுமே பெரிதும் பாதிப்பதாலும் மேலும் வியாபாரிகள் இதனால் சொல்லமுடியாத பல தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியிருப்பதாலும், பல கட்ட விற்பனைவரியை ரத்து செய்துவிட்டு, ஒரு முனை விற்பனைவரியை உடனடியாக சர்க்கார் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**12. என்.ஜி.ஓ.க்கள் நிலையை உயர்த்துக!**

இந்திய அரசியலாரின் நேரடியான நிர்வாகத்தின்கீழ்ப் பணிபுரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும், சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலியவற்றைப்போலவே, சென்னை அரசியலாரின் நிரவாகத்தின்கீழ்ப் பணிபுரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும், சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலிய ஊதியங்களைச் சென்னை அரசியலார் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது.

சென்னை 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்களின் சங்கம், ஊதியம் உயர எடுத்திருக்கும் முயற்சிகள் வெற்றிதருவதற்கான முழு ஆதரவும் தருவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**13. பள்ளிக் கல்வித் திட்டம்**

கல்வித் துறையைப் பொறுத்த வரையில், கீழ்க்கண்ட முறைகளை மேற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று, சென்னை அரசியலாரை, இம்மாநாடு வற்புறுத்துகிறது:—

குழந்தைகளின் பள்ளி செல்லும் வயது ஐந்து என்றிருப்பதை ஆறு என மாற்றியிருக்கும் அரசியலாரின் போக்கைக் கண்டிக்கிறது.

உயர்தர ஆரம்பக்கல்வியின் காலம் இப்போதிருப்பதைப்போலவே எட்டு ஆண்டுகளாகவே இருத்தல் வேண்டுமென்பதுடன் உயர்நிலை வகுப்பு வரை இலவசமாகக் கல்வி பயிற்றுவிக்கவேண்டும்;

உயர்தர ஆரம்பப் பள்ளியில் எட்டாவது வகுப்புத் தேர்ச்சிபெறும் மாணவன், நேரே உயர்நிலைப் பள்ளியில், நான்காம் படிவத்தில் சேருவதற்கான வாய்ப்பினை பெறுதல் வேண்டும்;

ஆரம்பப்பள்ளியில் வட்டாரமொழி கட்டாய மொழியாகவும்' உயர்தர ஆரம்பப் பள்ளியில் வட்டார மொழியோடு ஆங்கிலமொழி — இரண்டாவது கட்டாயமொழியாகவும் இருக்க வேண்டும். வேறு எந்தமொழியையும், எந்தநிலையிலும் கட்டாயப்படுத்துதல் கூடாது.

ஆரம்பப் பள்ளியில் எந்தவிதக் கைத்தொழிலும் கற்பிக்கவேண்டிய தேவையில்லை. நாட்டுக்குத் தேவைப்படும் குடிசைத் தொழிலையோ அல்லது பொறித் தொழிலையோ முதல் படிவத்திலிருந்து பள்ளியிலேயே கற்றுக்கொடுக்க முயலலாம்.

எந்தநிலையிலும் 'ஷிப்டு' முறை கூடாது

மூன்று வயதுக்குமேல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் எல்லோருக்கும் குழந்தை நலப்பள்ளி கட்டாயமாக விரைவில் ஏற்படுத்த வேண்டும்.

**14. சிலரிடம் முடங்கிக் கிடக்கும் நிலம்**

நிலச் சீர்திருத்தம் செய்யப்போவதாகக் கூறி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முற்படாமல், காலங்கடத்தி வீண் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அரசியலாரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், தனிப்பட்ட நிலப் பிரபுக்கள் மடாதிபதிகள்' கோயில்கள் ஆகிய வற்றின் ஆதிக்கத்தின்கீழ் முடங்கிக் கிடக்கும் பெரும் அளவு நிலங்களை. அவர்களின் உரிமையிலிருந்து விடுவித்து, விவசாயிகட்கே மிகுதியும் பயன்தாதக்க அனுபவ உரிமை வகையில், கூட்டுறவு முறையில் விவசாயத் துறையில் உடனடியாகத் திருத்தி யமைக்க வேண்டுமென்பதுடன், நியாயவார மசோதாவை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**15. தீப்பெட்டி, சவ்வரிசித் தொழில் பாதுகாக்கப்படவேண்டும்.**

திராவிடத்தில் முக்கியக் குடிசைத் தொழிலாகவும், எண்ணற்ற ஏழைக் குடும்பங்களின் அவலநிலையை ஓரளவு தீர்க்கப் பயன் படுவதுமான தீப்பெட்டித் தொழில் உற்பத்தி, மத்திய சர்க்கார் வடநாட்டுப் பெரும் முதலாளிகளுக்குக் காட்டும் சலுகையாலும் உத்திரவாலும் நசிந்து வருவதால் திராவிடத்தில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டித் தொழிலுக்கு அரசியலார் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சேலம் மாவட்டத்தில் சவ்வரிசித் தொழிலுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**16. விவசாயத்தில் மின்சாரப்பங்கீடு.**

நம் நாட்டிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் குறைந்த அளவு நிலமுள்ளவர்களாதலால் அவர்களின் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அரசியலார் மின்சாரப் பங்கீட்டை ஒப்பந்தத்தொகை நிர்ணயிக்காமல், விவசாயிகள், தாங்கள் எடுத்துக்கொள்ளும் அளவிற்கு மட்டுமே அதற்கான தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

**17. கைத்தறிப் பிரச்சினை**

கைத்தறித் தொழிலையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு—இந்தத் தலைமுறையினருக்கு வாழ்வளிக்கும் வகையில், கரை போட்ட வேட்டிகளையும், சேலைகளையும் தயாரிப்பதைக் கைத்தறிக்கென்றே ஒதுக்கிவிடவேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**கவர்னர் பதவி ஒழியட்டும்!**

# தமிழ்ச் சோலையில் 'இந்தி முதலாளி' பெயர் ஏன்?

கைத்தறிமூலம் தயாரிக்கப்படும் லுங்கி, கைக்குட்டை போன்றவை களை இலங்கைக்கும், மற்றும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் உத்தரவுகளை இந்திய அரசியலார் அடிக்கடி மாற்றுவதால், வடநாட்டி லுள்ள முதலாளிகளுக்கும், அன்னிய ஏஜண்டுகளுக்கும் அனுகூலமும், திராவிடத்திலுள்ள கைத்தறி நெச வாளர்களுக்கும் நெசவுத் தொழி லுக்கும் பெருங்கேடும் விளைவிப்பதால் இனியாகிலும் இந்திய அரசியலார் தங்கள் போக்கினை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு வலி யுறுத்துகிறது.

நெசவாளருக்குப் போதிய வேலை யும், வசதியும் இல்லாது அவதியுற் றிருக்கும் இந்நிலையில் விசைத் தறித் திட்டத்தைநடைமுறைக்குக்கொண்டு வருவது கைத்தறி நெசவாளர்களுக் குப் பெருத்த அளவில் பாதகம் ஏற் படுமாதலால்' அவர்களின் வாழ்வில் நல்லதோர் சூழ்நிலை அமையும்வரை விசைத்தறித் திட்டத்தை நிறுத்தி வைக்கவேண்டுமென்று இம்மாநாடு அரசியலாரை வலியுறுத்துகிறது.

**18. நாகர் நாடு தனிநாடாகும் பிரச்சினை.**

இந்தியத் துணைக் கண்டந்தி லிருந்து விடுதலைப் பெற்றுத் தனி நாடுகாண நாகர்கள் நடத்தும் கிளர்ச்சிகளை ஜனநாயக முறையில் அணுகாமல், பலாத்காரச் செயல் என்று காரணங் காட்டி, அந்த எழுச்சியை அடக்கி ஒடுக்கிவிடலா மென்ற இந்திய அரசியலாரின் ஆதி பத்திய எண்ணத்தை இம்மாநாடு கண்டிப்பதுடன், நாகர்களின் தனி நாடு கோரிக்கையை ஜனநாயக முறையில் தீர்த்துவைக்க வேண்டு மென இம்மாநாடு இந்திய அரசிய லாரைக் கேட்டுக்கொள்கிறது.

**19. மராட்டியரின் அறப்போருக்குப் பாராட்டு**

பம்பாய் நகரம், மராட்டிய மண்ட லத்தில் இணைந்திருக்க வேண்டு மென்ற நியாயமான கோரிக்கையைப் புறக்கணித்தும், அதற்காகப் போராடி வரும் மராட்டிய மக்களைக் கடுமையான அடக்குமுறையால் கொடுமைப்படுத் தியும் வரும் இந்திய அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மை யாகக் கண்டிப்பதுடன், மராட்டிய மக்களின் இந்த அறப்போர் வெற்றி யுறவேண்டுமென்று இம்மாநாடு விரும்புவதுடன், அறப்போரில் மராட்டிய மக்கள் காட்டிவரும் வீரத் தையும், மன உறுதியையும் இம் மாநாடு பாராட்டுகிறது.

**20. கல்லக்குடி பெயர்மாற்றம்**

திருச்சி மாவட்டத்தில், கல்லக்குடி யிலுள்ள புகைவண்டி நிலையத்திற்கு, டால்மியாபுரம் என வடநாட்டு முத லாளி ஒருவரைப் பெருமைப்படுத்தும் வகையில் பெயரிட்டிருப்பதைத் தமிழ் மக்கள் ஒருமுகமாகக் கண்டித்தும் கிளர்ச்சி செய்தும் இருப்பதை, மத் திய சர்க்காரும் சென்னை சர்க்காரும் அலட்சியப்படுத்திவரும் ஜனநாயக விரோதமான போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

விரைவில் இப்பிரச்சினையில் மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு உடன் பாடான வகையில் சர்க்காரின் போக்கு மாறாவிடில், திராவிட முன் னேற்றக் கழகம் மேலும் தீவிரமாகக் கிளர்ச்சியில் ஈடுபட நேரிடும் என் பதைச் சர்க்காருக்கு இம்மாநாடு நினைவுபடுத்துகிறது.

**21. சுயமரியாதைத் திருமணத்தை சட்ட மாக்குதல்**

சுயமரியாதைக் கொள்கை அடிப் படையில் இதுவரை நடைபெற் றுள்ள திருமணங்களையும், இனி நடைபெறவிருக்கும் திருமணங்களை யும், சட்டப் பூர்வமாக அனுமதிக்கும் வகையில், அரசியலார் சட்டத்தில் தக்க திருத்தம் செய்யவேண்டு மென்று இம்மாநாடு வலியுறுத்து கிறது.

**22. கவர்னர் சம்பளம்**

இந்தியத் துணைக்கண்டம் பிரிட் டிஷ் ஆட்சிப் பிடிப்பிலிருந்து விடுதலை பெற்றவுடன் ஜனநாயக அரசியல் முறைக்குச் சிறிதும் ஒவ்வாத கவர் னர் பதவி ஒழிக்கப்படும் என்று அளித்த வாக்குறுதியைக் காங்கிரஸ் ஆட்சியினர் காப்பாற்றாமல், கவர்னர் பதவிகளை நீடித்து வருவது கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துகிறது.

(அ) டில்லி ஏகாதிபத்தியத்தின் சின்னமாய் விளங்கும் கவர்னர் பத வியை நீடிக்கச் செய்து, சென்னை மக்களின் வரிப் பணத்திலிருந்து ஆண்டுதோறும் ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய்களைப் பாழாக்கி வரு வதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், அப்பதவி உடனடி யாக அகற்றப்படுதல் வேண்டுமென வும் அரசியலாரை இம்மாநாடு வலி யுறுத்துகிறது.

**23. தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்**

நீண்ட நாட்களாகத் தமிழக மக் கள் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் சரியான நடவடிக்கைகளை எடுக்கா மல், தள்ளிப் போட்டுக்கொண்டு வரு கிற நிலையைக் கண்டிப்பதுடன், உடனடியாகத் தமிழகத்தின் எல்லா மாவட்டங்கட்கும், ஆட்சிமொழியாகத் தமிழைத் துரிதமாக ஆக்கவேண்டு மென இம் மாநாடு கேட்டுக்கொள் கிறது.

**24. தட்சிணப் பிரதேச எதிர்ப்பு**

மக்களின் எதிர்ப்புணர்ச்சியைக் கண்டு தெளிவுபெற்று, வங்காளம்—பீகார் இணைப்புத் திட்டத்தைக் கைவிட்டதாக வங்க முதலமைச்சர் அறிவித்திருப்பதைக் கண்டேனும் தெளிவு பெற்று, இங்குள்ள ஆட்சி யாளர்களும், பிறரும் தட்சிணப் பிர தேசத் திட்டத்தைப் புகுத்துவதற் காக எடுத்துக்கொண்டுள்ள முயற்சி களைக் கைவிட வேண்டும் என்று, மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது.

**25. ஆங்கிலம் பொது மொழி**

இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய ஆட்சிபீடத்தின் ஆட்சி மொழியாகவும், மாநில அரசுகளுக் கிடையே தொடர்பு கொள்ளும் பொதுமொழியாகவும் வளர்ச்சியற்ற தும், பெரும்பான்மையோரால் பேசப் படாததுமான இந்தி மொழியை டில்லி ஏகாதிபத்தியம் புகுத்தி வரு வதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இதுகாறும் இந்தியாவின் பொது மொழியாக இருந்து வருவதும், உலகப் பொதுமொழியாக விளங்கு வதும், அறிவியல் மொழியாக வளர் வதுமான ஆங்கிலத்தையே தொடர்ந்து இந்திய அரசின் ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் கைக்கொள்ளல் வேண்டுமென்று இம் மாநாடு வற்புறுத்துவதுடன், அதற்கேற்ப அரசியல் சட்டத்தையும் உடனே திருத்தி அமைக்க வேண்டு மென்று கோருகிறது.

**26. தி. மு. கழகத் தொழிலாளர்கள்**

திராவிடமுன்னேற்றகழகப்பற்றுக் கொண்ட தொழிலாளர் தோழர்கள், பொதுவாக அரசியல் கட்சிகளின் ஆதிக்கமில்லாத தொழிற் சங்கங் களில் சேர்ந்து பணியாற்ற வேண்டு மென்றும், அவ்வித நோக்கத்திற்கு

**தாய் மொழியில் ஆட்சி நடத்துக!**

# 'தமிழ் நாடு' பெயர் சூட்டச் சம்மதிக்காததேன்?

மாறாகவும், எதிர்ப்பாகவும் தொழிற் சங்கம் இயங்கும் இடங்களில் அரசியல் ஆதிக்கமற்ற முறையில் தொழிற சங்கங்களை திராவிட முன்னேற்றக் கழகப் பற்றுக்கொண்ட தொழிலாளர் தோழர்கள் துவங்க வேண்டுமென்றும், அவ்வாறு அமைக்கப்படும் தொழிற் சங்கங்களுக்கு அவசர அவசியமேற்படுமபோது திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணை புரிதல் வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

ஆர்வியில் வெள்ளைக்கார நிர்வாகத்தினர், தொழிலாளர் மீது சுமத்தவிருக்கும் வேலைப் பளுவை உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், அரசியலாரும் உடனடியாக இதற்கு ஆவன செய்ய வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது.

**27.** பர்மா போக்குவரத்து

பர்மாவுக்கு (ரங்கூனுக்கு) நீண்ட நாட்களாய் நேரடிக் கப்பல் இன்றி மக்கள் வடநாடு சுற்றி வழிபறிபோல் கையில் கொண்டுவரும் சிறுபொருளையும் இழந்து ஆற்றமுடியா வழித்துயர் அடைந்து, இங்கண் வந்து சேருகின்றனர். இவர்களின் நிலையை பர்மாவில் பல சங்கங்களும், பத்திரிகைகளும் வன்மையாக எழுதியும், இந்தி அரசாங்கம் அதை மமதையாக அசட்டை செய்து வந்துகொண்டே இருக்கிறது; இப்போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், இனியேனும் இந்திய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

**28.** நகரசபைச் சட்டம்

சென்னை முனிசிபாலிடிச் சட்டம் 1920 முதல் திருத்தப்படாமலே இருக்கிறது இதனை உடனடியாகத் திருத்தியமைத்து, இரத்தினசபாபதி கமிட்டியின் சிபாரிசுகளை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நகரசபைத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்றும் இம் மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

**29.** கழகக் கருத்துகளைப் பரப்ப!

ஆந்திரம், கர்னாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் கழகக் கிளைகளைத் தோற்றுவிககவும்,கழகக்கருத்துக்களை பரப்புவதற்கும் பொதுச் செயலாளர் குழு ஒன்று நிறுவி ரூ. 5000 செலவிடுவது என்றும், இந்தத் தொகையைத் திரட்டித் தரும் பொறுப்பை பொதுக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும 50 ரூபாயாக ஏற்று மாவட்ட ரீதியாக 500 ரூபாய் திரட்டித் தருவதென்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

**30.** நில அடமான பாங்கி

நம் நாட்டில் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் 100-க்கு 80 பேருக்கு மேல கடனாளிகளாக இருப்பதால், நில அடமான பாங்கிகள் கடனளிக்க நீண்ட காலமாவதோடு, 1939-ம் ஆண்டின் விலை அடிப்படையில் இருப்பதால், விவசாயிகள் போதிய கடன் வசதிபெற முடியாததாலும், நீண்ட நாட்களாவதால், அரசியலார் விவசாயிகளுக்குத் தற்கால மதிப்பீட்டின் பேரில் கடன் விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது,

**31.** மாநில புனரமைப்பு

மாநிலப் புது அமைப்பில் தமிழகத்துக்கு உரித்தான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி, (சித்தூர்) செங்கோட்டை, பாலக்காடு வட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகள ஆகியவையும், ஆந்திரா — சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளும் தமிழகத்தோடு இணைக்கப்படாமல், தமிழர்களுக்கு விரோதமாக மத்திய சர்க்கார் செய்துள்ள ஜனநாயகத்திற்குப் புறம்பான முடிவை இம் மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது;

(அ) இப்பிரச்சினையில் சென்னை மாநில சர்ககார் கொண்டுள்ள காட்டிக் கொடுக்கும் போக்கினை இனியாகிலும் மாற்றிக்கொள்ள வேண்டுமென இம்மாநாடு எச்சரிக்கிறது.

(ஆ) மாநிலப் புது அமைப்புக் குழுவினரிடம் சென்னை சர்க்கார் தங்கள் தரப்பில் நின்று சாட்சியம் கூறியதற் கேற்பவும், பொதுவாகத் தமிழகத்திலுள்ள அனைவருமே ஒன்றுபட்டு விடுத்திருந்த வேண்டுகோளுக் கேற்பவும், சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிடப்படும கோரிக்கையை நிறைவேற்றும் அதிகாரம் சென்னை சர்க்காருக்கே இருந்தும்கூட அதற்கு மாறாகப் பிடிவாதம் காட்டும் சென்னை சர்க்காரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) சென்னை-ஆந்திரா எல்லைத் தகராறுள்ள தமிழ்ப் பகுதிகள் சம்பந்தமாக, ஆந்திரா, சென்னை இரு சர்க்கார்களும் பேச்சுவார்த்தை நடத்தி சரியான முடிவு காணாததால், எல்லைக் கமிஷன் அமைத்துத்தான் தீர்க்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்குத் தமது கோரிக்கையை அனுப்பியிருந்தும் வீண் காலதாமதம் செய்து வரும் மத்திய அரசினரின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், மாநிலப் புனரமைப்பு மசோதா சட்டமாக்கப்படுவதற்கு முன்னரே எல்லைக கமிஷன் அமைக்கும் தீர்மானத்தையும் சேர்த்து சட்டமாக்க வேண்டுமென்றும் மத்திய சர்க்காரை இம் மாநாடு வலியுறுத்துகிறது.

(ஈ) புதுவை, காரைக்கால் பகுதிகள தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**32.** திராவிட சமதர்மக் குடியரசு ஆட்சி

தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னாடகம் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு, பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய திராவிட சமதர்மக் குடியரசு ஆட்சியை ஜனநாயக முறையில் அமைத்தல் வேண்டுமென்று எல்லா மாநாடுகளிலும் வலியுறுத்தி வந்துள்ள நமது கழகத்தின் குறிக்கோளை மீண்டும் இம் மாநில மாநாட்டில் வலியுறுத்துவதுடன், இந்திய அரசியலார் இனியாவது இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இம் மாநாடு நினைவூட்டுகிறது.

**33.** பொதுத் தேர்தல்

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட வேண்டும் என்று இம் மாநில மாநாடு முழுமனதோடு தீர்மானிக்கிறது. ★


நீங்கள் படித்துவிட்டீர்களா ?

புத்தம்புதிய நூல்

★

விலை அணா எட்டுதான் !

சி. என். ஏ.

தீட்டிய

**நாட்டின் நாயகர்கள்**

வியாபாரிகளுக்கு 25 கழிவு

தனிப்பிரதி வேண்டுவோர்

போதிய தபால் தலைகள்

அனுப்புக.

**பரிமளம் பதிப்பகம்**

**காஞ்சீபுரம்.**

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மேதைகள் இலக்கியச் செறிவு குறித்தும் இலக்கணம் அளிக்கும் வடிவழகு பற்றியும் பேசினர்—எழுதினர்—வாதங்கள் புரிந்தனர்!

கடைக்கண்ணின் பொலிவுக்கும் கட்கத்தின் வலிவுக்கும் தம் எழுத்துத் திறமையைக் காணிக்கையாக்கி, படிப்போரின் இதயங்களைத் தடவி மகிழ்ந்தனர் கதாசிரியர்கள்.

வணிகர்கள் கடலிடை உள்ளதையும் காட்டிடை காணப்படுவதையும், மலைபடு பொருளையும், மக்கள் தம் உழைப்பால் உருவம் பெறுவதையும், நானிலமெங்கும், கொண்டும் கொடுத்தும், இலாபம் திரட்டி மகிழ்ந்தனர்.

ஆட்சியாளர்களோ, சட்டம் சரியாமலும், சமூகத்தின் அமைப்பு மாறாமலும் இருந்திடத் தம் ஆற்றலைப் பயன்படுத்தினர்.

ஒருவரேனும், மிருகமாக்கப்பட்ட மனிதனை, ஏறெடுத்தும் பார்க்கவில்லை, ஏனென்று கேட்கவில்லை!

பட்டியில் மாடென அடைத்து வைத்தனர்.

பன்றிகளுக்குப் போடும் தீனியை அவனுக்கு வீசினர்.

அவனை அடிமை கொண்டவன், ஆயாசப்படுகிறான், அவன் துள்ளித் துடித்துக் கீழே துவண்டு விழவில்லையே, சவுக்கடி கொடுத்தும் என்று.

தாயை மகனிடமிருந்து, மனைவியைக் கணவனிடமிருந்து, குழந்தையைத் தாயின் அணைப்பிலிருந்து, பிரித்துவிற்கிறான் 'எஜமானன்' — ஒருவரும், "ஐயோ பாவம்!"—என்று கூறவில்லை.

பாதிரிகளே இது பாபம் என்று கூறவில்லை!

ஞாயிற்றுக்கிழமை ஆலயம் வரவில்லை—பாபம்!

பாதிரியாருக்குக் காணிக்கை தரவில்லை—பாபம்!

ஆலயமணி வாங்க 'தர்மம்' தரவில்லை—பாபம்!

இப்படிப்பட்ட 'பாபம்'பற்றித்தான்—உள்ளம் உருகும் வண்ணம் பேசிவந்தனர்—பாதிரிமார்!

இந்தச் சாமான்யன் தான் கேட்டான், மனிதனை மிருகமாக்குகிறீர்களே! மாபாவிகளே! மாதாகோயில் சென்று மண்டியிடுகிறீர்களே! கர்த்தரிடம் கருணையை எதிர்பார்க்கிறீர்களே! அக்ரமமல்லவா! அநியாயமல்லவா!-என்றெல்லாம் பேசினான்; அலட்சியப்படுத்தினர்; அப்போதுதான் காரிசன் கூறினான், நான் உண்மையைப் பேசுகிறேன் — எனவே என்பேச்சு உங்கள் செவியில் விழுந்தே தீரும் என்று! ஆணவம்பிடித்தவன் என்று இடித்துரைத்தனர் முதலில் — பிறகோ காரிசன் சொன்னபடிதான் நடந்தது—அவன் பேச்சு, அனைவர் செவியிலும் விழுந்தது—வெற்றியும் கிடைத்தது.

தம்பி! அமெரிக்காவுக்கு உன்னை அழைத்துச் சென்று இதனைக் காட்டுவதற்குக் காரணம்—நெடுந்தொலைவிலே உள்ள காட்சியாகையால் கவர்ச்சி தெரியும் என்பதற்காகத்தான்!

எத்துணை நம்பிக்கையுடன் பணியாற்றி, வெற்றி பெற்றான்! இஃதன்றோ, அறிவாற்றல்!— என்று பாராட்டுவர், எவரும்! ஆனால் தம்பி, இதோ இங்கு, நாம பேசினோம் — கேட்க மறுத்தனர்— ஏசி ஒழித்திட முனைந்தனர்—ஏளனம் பேசினர் — எரிச்சல் மூட்டினர் — எனினும், நாம் கூறினோம்—நாங்கள் பேசுகிறோம் — அது உங்கள் செவியில் விழுந்தே தீரும் — ஏனெனில் நாங்கள் உள்ளொன்றும் உதட்டிலொன்றும் கொண்டு பேசவில்லை—எமது 'மேதை'யை விளம்பரப்படுத்திக்கொள்ளப் பேசுகின்றோமில்லை-உண்மையை உரைக்கிறோம், எனவே, அதனை நீவிர் நீண்ட காலம் அலட்சியப்படுத்திவிட முடியாது — எமது பேச்சு உமது செவியில் வீழ்ந்தே தீரும்— என்றோம்.

சூளுரைத்தோம் — வெற்றியும் பெற்றோம்!

இதுபோது, நமது சொல் புகாத செவியில்லை—நமது பேச்சுபற்றிச் சிந்திக்காத மனம் இல்லை—நம்மைப் பற்றிய பேச்சு எழாத பட்டியில்லை —நமது வளர்ச்சி குறித்துக் கணித்திடாத கட்சி இல்லை!! மாநில மாநாடு, இதனை நமக்கு மிக நன்றாக எடுத்துக்காட்டிற்று.

உள்ளத்தில் உறுதி கொண்டால், வாக்கினிலே வலிவும் பொலிவும் ஏற்பட்டே தீரும்—என்பதனை, எடுத்துக்காட்டும் விதமாக, மாநில மாநாட்டிலே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நமது தோழர்கள் பேசினர் அல்லவா! அது கேட்டு மகிழாதார் யார்? மாநில மாநாட்டுக்கு வந்திருந்த மாற்றுக் கட்சிக்காரர்கூட, மகிழ்ந்தனர் — அது வெளியே தெரிந்துவிடக் கூடாதே என்பதற்காக, வெகு பாடுபட்டனர். அனைவருக்கும் ஆனந்தம்— ஆனால் நான் அடைந்த மகிழ்ச்சி இருக்கிறதே, தம்பி, அது அலாதியானது. நீ அறிவாய், இந்த நாடும் அறியும், நான் பதினைந்து ஆண்டு காலத்துக்கு மேலாக, பெரியாரிடம் பணியாற்றியவன் என்பதை. அப்போதெல்லாம், அவர் கூறுவார்—யார் இருக்கிறார்கள், யோக்யதையுடன்? எவரை நம்பி எந்தக் காரியத்தை ஒப்படைப்பேன்? எவன் என் மனம் திருப்தி அடையும்படி நடந்துகொள்கிறான்!—என்றெல்லாம். கேட்பதற்கு மெத்த வருத்தமாக இருக்கும்— சில விநாடிகளுக்குப் பிறகு, வெட்கமாக இருக்கும் — நாட்கள் செல்லச் செல்ல வேதனையே கொடுக்கும். இவ்வளவு கஷ்டப்படுகிறார்—நாள் தவறாமல் பயணம்—நேரம் கிடைக்கும்போதெல்லாம் எழுதுகிறார் — ஓய்வின்றி உழைக்கிறார்—இருந்தும், ஒருவர் கூட 'யோக்யதை'யைப் பெறவில்லையே-பரிதாபம்—உழைப்பெல்லாம் வீணாகிப் போகிறதே என்று, வேதனையாக இருக்கும். பிறகு என்னைப் பற்றிய எண்ணம் பிறக்கும்—சே! நமக்கு அந்தப் பரிபக்குவம் ஏற்படவே இல்லையே, என்று வெட்கம் பிறக்கும்.

அப்படிப்பட்ட 'நிலை' பெரியாருக்கு! இப்போதும் அதிலே மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை என்பது ஒரே வழி அவர் அறிக்கைகள் அறிவிக்கின்றன.

நான், மாநில மாநாட்டிலே 'கர்வம்'கூட அடைந்தேன்! எத்தனை எத்தனை ஆற்றலுள்ள இளவல்கள், பொறுப்பறிந்த பெரியவர்கள், அஞ்சா நெஞ்சு படைத்த வீரர்கள்! ஆறேழு ஆண்டுகளிலே அமைந்துவிட்ட அணி வகுப்பு!

மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும்— அமைக்கவேண்டிய கொட்

"புத்தர், ஒரு கடவுளல்ல; தேவனுமல்ல, தேவதையுமல்ல, மனிதன். சாதி, மூட நம்பிக்கை, வீண் ஆராதனைகளை எதிர்த்து முழக்கம் எழுப்பினார் அவர்" —நேரு.

(மே-25)

டகையின் அளவு குறிப்பிலும், கொட்டகைக்கு ஏற்ற கழிகள் பொறுக்குவதிலும், கழிகளுக்கேற்ற குழிகள் பறிப்பதிலும் அதற்கான உழைப்பை உற்சாகத்துடன் தந்திடும் தோழர்களின் உள்ளன்பைக் காண்பதிலுமல்லவா ஈடுபட்டிருந்தேன் — நாவலரும் நடராசனும் பிரதிநிதிகள் கூட்டம் நடத்துவதிலும் தீர்மானங்கள் குறித்து ஆய்வுரை நடத்துவதிலும ஈடுபட்டிருந்த நேரத்தில்.

எனக்கு, எந்தக் காரியம் குந்தகப்பட்டுவிடுமோ — எது எப்படிக் குலைந்துவிடுமோ — நமது கண் பார்வை விழாததாலோ, கை படாததாலோ, எந்தச் செயல் செம்மையற்றதாகிவிடுமோ என்ற கவலையே எழவில்லை — எல்லாவற்றினையும் பொறுப்புடன் கவனித்துக் கொள்ள, நிரம்பத் திறன்படைத்தவர்கள் நமது கழகத்திலே இருக்கிறார்கள்—என்ற நம்பிக்கை காரணமாக.

நமது மாநில மாநாட்டிலேயே, தம்பி, பொதுத் தேர்தலில் நமது கழகம் ஈடுபடவேண்டுமா, வேண்டாமா என்பதல்லவா மிக முக்கியமான பிரச்சினை — கேட்டுப் பார், தம்பி, அது குறித்தேனும் நான், நமது கழகத்தின் காவலர்களிடம் கலந்து பேசினேனா—ஜாடை காட்டினேனா? என்று! இல்லை; அவ்வளவு அலட்சியம் என்பதல்ல— அவ்வளவு நம்பிக்கை எனக்கு. ஓட்டுச் சீட்டுகளைப் போடுவதற்கான முறை என்ன என்பது குறித்து, நமது நாவலரும் பிறரும் யோசித்துக்கொண்டிருந்திருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன் —நான், ராபியும் தர்முவும், பராங்குசமும் வாணனும், பூஞ்சோலையும் மற்ற நண்பர்களுடனும் கூடிக் கொண்டு, உன் கண்ணுக்கு விருந்தாகவும் கருத்துக்கு உவகையாகவும் அமைந்திருந்த சிங்கங்களைக் கவனித்துக்கொண்டிருந்தபோது!

மணமகன் எழுந்திருந்து மண அறைக்கு வருவதற்கு முன்பே, துயிலெழுந்து, மேளக்காரர் எங்கே? பந்தல்காரரைக் கூப்பிடு—சமையற்காரர் எங்கே? பூமாலைக்காரர் எங்கே பார்?—என்று கேட்டு, சருகான உடல் இருப்பினும், சிட்டு எனச் சுற்றி வந்து வேலை பார்த்து அதனாலேயே பெருமகிழ்ச்சிகொள்கிறாரே வயோதிகர் — மணமகனைவிட அதிகமான அளவு அலாதியான மகிழ்ச்சி பெறுகிறாரே—அது போல் எனக்கு, இந்த மாநில மாநாட்டிலே மகிழ்ச்சி!! என் மகன் திருமணம் இரண்டோர் ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தவேண்டும் —இதே விதமான களிப்பு அப்போது நான் பெறுவேன்.

என்றால் பெற முடிந்த இந்தக் களிப்பினை — நான் உடனிருந்து பணியாற்றும் நண்பர்களிடம் நம்பிக்கைகொள்வதால், அவர்தம் திறமைகளுக்குத் தக்க வாய்ப்புகளை அவர்களுக்கு அளித்திடும் பொறுப்பினை நிறைவேற்றியதால் நான் பெற்றிடும் இந்தப் பேரானந்தத்தை—பெரியார் பெற மறுத்து விட்டாரே—என்னே இதன் காரணம்—என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்று நமது கழகத்தில் இருந்தவர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள், நான் முன்னமோர் சமயம் உரிமையுடனும் உவகை பொங்கவும் கூறியபடி மீரான் சாயபு தெருவில் வளர்ந்தவர்களே! அவர்களிடமெல்லாம் இன்று காணப்பட்டு, கழகத்தின்மூலம் நாட்டுக்குப்பயன்பட்டு, எனக்குக் கழிபேருவகையூட்டும் இந்த ஆற்றல் — முன்பு இல்லையோ அடியோடு—எனின்— எவரும் அங்ஙனம் கூற இயலாது. எல்லா ஆற்றலும் இருந்தது. ஆனால், யாவும், குடத்தில் இட்ட விளக்காய் இருந்தது. இன்று, மூன்று இலட்சம் மக்கள் கூடுகிறார்கள் — மூதறிஞர்கள் கேட்டுப் பாராட்டத்தக்க பேச்சும், வீரர்கள் கண்டு உறவுகொண்டாடத்தக்க செயலும் விளங்குகிறது—திருச்சியில் இந்த ஆற்றல் படையினர் நடாத்திய மாநாடு, தமிழகமே போற்றத்தக்க திருவிழா ஆயிற்று!

தம்பி! இவ்வளவுக்குப் பிறகு— நாம் என்ன ஆனோம் என்கிறாய்?

*வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி கண்டோம்.*

*விசை ஒடிந்த தேகத்தில் வன்மை கொண்டோம்.*

*தாழ்ச்சியுறும் நிலை ஒழிப்போம் —தாசராகோம்— தன்னரசு காண்பதற்கே தகுதி பெற்றோம்.*

இவ்விதமெல்லாம் இசை கிளம்பும் உன் உள்ளத்தில் — செல்வா பாடிக் கேட்டால் செந்தேனை இனிக்கும் — கஸ்தூரி பாடினால் இசை மணக்கும் என்றெல்லாம் கூறுவாய்.

ஆனால், மாநில மாநாட்டுக்குப் பிறகு, நாம் என்ன ஆனோம் என்று நமது பணியினைப் பிணியென்றெண்ணி விலக்கிவிட்ட நண்பர் கூறுகிறார், அறிவாயா!

நாடே வியந்தது! நல்லோர் கொண்டாடினர்! நான்கு நாட்கள் கருத்துச் சுவை பெற்றோம்! தித்திக்கும் பேச்சுமட்டுமல்ல, திட்டவட்டமான தீர்மானங்கள் நிறைவேற்றினோம்! திருப்புமுனை!—என்றெல்லாம் நீ பூரிக்கிறாய், தம்பி, பெருமைப்படுகிறாய். ஆனால், மாநில மாநாடு என்ன செய்திருக்கிறது என்பதை எடுத்தியம்பியுள்ளார் ஒரு ஆராய்ச்சியாளர்—கேள்! பதறமாட்டாய் என்பதை நான் அறிவேன் தம்பி, ஏனெனில் இது போன்ற பல கேட்டுக் கேட்டுப் பழகிப்போயுள்ள நிலை அல்லவா உனக்கும், எனக்கும்.

**அந்த நண்பர் கூறுகிறார், மாநில மாநாட்டுக்குப் பிறகு, நாம் செத்துவிட்டோம் என்று.**

தம்பி! சிரிக்காதே! சிரமப்பட்டு' சிந்தனையைச் செலவிட்டு, அவருக்கு இயல்பாக உள்ள நல்ல இதயத்தில் வேண்டுமளவு நஞ்சு கலந்துகொண்டு, கூறுகிறார், செத்துவிட்டார்கள் என்று!

அடே அப்பா! பய, என்னென்ன விதமா ஆடுவான், பாடுவான்— எதைக்குறித்தும் கவலை கொள்வதில்லை — இனி முடியுமா அப்படி ஆடியோட, திமிர் ஒழிந்துபோச்சு, இனி ஆசாமி, பெட்டிப் பாம்பாகிவிட வேண்டியதுதான். ஆட்டம் பாட்டம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்தே போகும்! இனித்தானே தெரியும் அவனுக்கு! மாட்டிக்கொண்டு திண்டாடப் போகிறான்!—

இவ்விதம் முதியவர்கள், கடுகடுத்த முகத்துடன் அல்ல, சிரிப்புப் பொங்கி வழியும் நிலையில் சொல்லுவார்கள், யாராவது ஒரு வாலிபனைக் குறித்து. என்ன இது, இந்தக் கிழவர் இப்படி எல்லாம் அந்த வாலிபனைத் தாக்கிப் பேசுகிறாரே, என்றுகூட எண்ணிடத் தோன்றும்.

தாத்தா! ஏன் இப்படி எல்லாம் சொல்கிறீர்கள் என்று கேட்டால், முதியவர் நமது முதுகில் தட்டியபடி சொல்வார். தெரியாதா, விஷயம், நம்ம ஆடியபாதத்துக்குக் கலியாணம் ஆகிவிட்டது! கால்கட்டுப்

போட்டாச்சி! இனி ஆட்டம் பாட்டம், அலட்சியம் எல்லாம் அடங்கித்தானே போகும்! — என்று கூறுவார்.

நாம் செத்துவிட்டோம் என்று கூறினவர் நோக்கம் என்ன என்பது கிடக்கட்டும் — அவருடைய உள்ளம் நற்பண்புகளுக்கு உறைவிடம் என்பதைப் பழகி அறிந்து மகிழ்ந்தவன் நான் — இப்போது அரசியல் 'ரசாயனம்' என்ன மாறுதல் விளைவித்து விட்டதோ அறியேன்—என் நினைவில் அந்தப் பழைய பண்பாளர் மட்டுமே இருக்கிறார்—இன்று அவர் எந்த நோக்கத்தோடு, நாம் செத்துவிட்டோம் என்று கூறினார் என்பது கிடக்கட்டும்—அவருடைய பேச்சை, திருமணமான ஆடியபாதத்தை முதியவர் மகிழ்ச்சி பொங்கும் நிலையில் அவருக்கே உரித்தான 'பாஷை'யில் பாராட்டினாரே, அதற்கொப்பானதாகவே நான் கொள்கிறேன்.

17—18—19—20—இன்ப நாட்கள் என்கிறாய் நீ! ஆமாம் என்கிறது நாடு! உண்மை என்கிறேன் நான்! மாநில மாநாடு — மணம் நிறைந்த பூந்தோட்டம் — இல்லை, இல்லை, கனி குலுங்கும் சோலை— அல்ல அப்பா, அது காவியப் பூங்கா — என்றெல்லாம் பாராட்டிடும் பல்லாயிரவரைக் காண்கிறேன். பெற்ற முத்தத்தை எண்ணி எண்ணிச் சுவை பெறும் காதலன் பெறும் இன்பம் எத்தன்மையது என்பது கூடப் புரிகிறது!

பழமுதிர் சோலை அல்ல—இது பாசறை — என்கின்றனர் பல்லாயிரவர்! அதற்கென்ன ஐயம்—என்கிறேன் நான். இப்படி நாமெல்லாம், மாநில மாநாடு, மலர்ச்சோலை, பழச்சோலை, பாசறை, பல்கலைக் கழகம் என்றெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறோம்—மாநில மாநாடு மரணப் படுக்கை என்பதை அவர் கண்டறிந்து, இந்தப் பேருண்மையை உலகு இழந்துவிடக் கூடாதே என்ற ஆவலால் தாக்குண்டு, கூறியே விட்டார், மாநில மாநாடு முடிந்தது —இவர்களும் மடிந்தனர்—என்று.

இவர், இருபதாம் தேதியுடன் நாம் இறந்துபட்டோம் என்று கூறிவிட்டார்.

வேறோர் தெளிவாளர், ஆட்சியாளர், காமராஜர் கூறுகிறார், இல்லை, இல்லை, இவர்களுக்கு மரணம் இனித்தான் வரப்போகிறது —விரைவில்—என்று கூறுகிறார்.

முன்னவர் 'டாக்டர்'—பின்னவர் ஆரூடக்காரர்!

முன்னவர், ஜில்லிட்டுப்போய் விட்டது—நாடி பேசவில்லை—செத்தார்கள் என்று கூறிவிட்டார்.

பின்னவரோ, ஜாதகத்தைப் புரட்டிப் பார்த்தோ, குருவி கூறுவது கேட்டோ, செப்புகிறார், இவர்கள் துள்ளுகிறார்கள் விரைவில் மடியப் போகிறார்கள் என்று.

ஐயா டாக்டரே! அருமை அமைச்சரே! நாங்கள் செத்துப் போகவுமில்லை, சாகப்போவது மில்லை, என்று நாம் கூறவா வேண்டும்!

அவர்கள்தான், பாபம், மாநில மாநாட்டுச் செய்திகள் கேட்டு, சித்தம் குழம்பி, ஏதேதோ சத்த மிடுகிறார்கள் என்றால், மகத்தான வெற்றிபெற்று, அந்த விருந்தின் சுவையைக் கண்டு மகிழ்ந்த நிலையில் இருக்கும் நாமுமா அவர்கள் போல் அர்த்தமற்றதைப் பேசிக் கொண்டிருப்பது. வேண்டாத காரியம்! வேறு வேலை நிரம்ப இருக்கிறது!!

ஆனால், அவ்விருவரும் ஏன் கூறுகின்றனர் இதுபோல்!!

நாம், தேர்தலில் ஈடுபடுவது என்று தீர்மானித்திருக்கிறோமல்லவா—அதனால்

அந்தத் தீர்மானமே நமது கழகத்தைச் சாகடித்துவிட்டது என்கிறார் ஒருவர்.

அந்தத் தீர்மானத்தின்படி நாம் தேர்தலுக்கு நின்றால், அதிலே நாம் ஒழிந்துபோய்விடுவோம, கழகம் மடிந்துபோகும் என்கிறார் மற்றோர் மதிவாணர்.

எத்தனை முறை 'சாபம்' கொடுத்துவிட்டோம் — எவ்வளவு ஆரூடம் கணித்துக் கணித்து ஏமாந்துபோனோம்—இனியும் நமக்கேன் இந்த 'ஆகாவழி' என்று அவர்கள் எண்ணவில்லையே என்றுதான் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

கழகம் காண்பதே முடியாத காரியம்.

கழகம் கருகியே போகும் — விரைவில்.

கழகம் உடைந்துபோகும்—உட்பகையால்.

கழகம் செத்துப்போகும்—செயலற்றதால்.

கழகம் மாண்டொழியும் — எங்கள் போர்வெற்றிச் சேதி கேட்டு.

கழகம் கரைகிறது — துரோகி தொலைந்துபோவான்.

விதவிதமாகக் கூறினர், வேலைக் கொன்று கூறினர்; நமது கழகமோ தூற்றலையும்; தொல்லையையும் தாங்கித்தாங்கி, உரம் பெற்று விட்டது.

இப்போது அவர்களுக்கு ஒரு ஆசை — தேர்தல் நமது கழகத்தைச் சாகடித்துவிடும் என்று.

டாக்டர்—ஜோதிடர்—இருவருக்குமே, இப்போதே கூறுகிறேன்— தேர்தல் நமது கழகத்தின் உயிரைக் குடித்திடும் என்று மனப்பால் குடிக்காதீர் — ஏமாற்றம் அடைவீர்.

தேர்தல்—அதன் இலட்சணம், அதிலே ஈடுபடுவதற்கான நோக்கம் — அதிலே ஈடுபடுவதற்கான முறைகள் — இவைகளை ஆய்ந்து பாராமல் மக்கள் தீர்ப்பளித்திடவில்லை.

தேர்தல்—நமது கழகத்துக்குப் புதியதோர் பொறுப்பு—தவிர்க்க முடியாத கடமை.

திராவிட முன்னேற்றக் கழகம், அந்தப் பொறுப்பினை ஏற்றிடும் பக்குவத்தை மட்டுமல்ல, அதன் விளைவுகளுக்கேற்றபடி, நிலைமைகளை உருவாக்கிக்கொண்டிடும், திறன் பெற்றிருக்கிறது. அதனை அறியும் வாய்ப்பினை, டாக்டருக்கும் ஜோதிடருக்கும் அளிக்கிறோம் —பிறகேனும்........!!

ஓஹோ! ஒரு பெருந் தவறு செய்துவிட்டேன். அவர்கள், உண்மையை உணர்ந்த பிறகு

---

நம்முடைய மதக் கொள்கையைப் பரப்புவதற்காக ஒரு கிருஸ்துவ—பாதிரியார் வனாந்தரங்களில் அலைந்து திரிந்து நரமாமிச பட்சணிகளையும் அணுகி உபதேசம் புரிகிறார். ஆனால் நம்முடைய குருமார்களோ, தங்கள் சோதரரைத் தொட்டால் தீட்டு என்று எண்ணி ஒதுங்கி வாழ்கின்றனர். —R. R. திவாகர்.

போக்கை மாற்றிக்கொள்வார்கள் என்று சொல்ல வாயெடுத்தேன் —அது பெருந்தவறு என்பதை உணர்ந்தேன்.

அவர்கள் உண்மையை உணராததால் இதுபோலெல்லாம் பேசுவதல்லவே. அவர்களுக்கு உண்மை மிக நன்றாகத் தெரியும்; ஆனால், அவர்களை நம்பி உள்ளவர்களுக்கு, ஒருவிதமான உற்சாகமூட்டவேண்டுமே — போனது போக மிச்சம் இருப்பதையாவது காப்பாற்றிக்கொள்ளவேண்டுமே, அதற்காகத்தான் இவ்வாறெல்லாம் பேசுகிறார்கள். வேறென்ன!

“ஸ்டாலின்கிராட் நகரினைத் தாக்கிப் பிடித்திட, இருபது டிவிஷன் விமானங்களை உடனே அனுப்ப உத்தரவு பிறப்பிக்க வேணடும்” என்று கொயபிள்ஸ் கேட்டானாம், ஹிட்லரிடம்.

கடுங்கோபம் கொண்ட ஹிட்லர் “என்ன இது? ஸ்டாலின்கிராட் பிடிபட்டதாகிவிட்டது என்று சென்ற வாரம் நாம் வெற்றி விழா கொண்டாடவில்லையா?’ என்று கேட்டானாம். “ஆமாம்! அது பிரச்சாரத்துக்காக!” என்று கொயபிள்ஸ் கூறிவிட்டுச் சிரித்தானாம்.

நமது மாநில மாநாடு, தமிழகத்தின் சமீப கால அரசியல் வரலாற்றிலேயே காணக் கிடைக்காததோர் வெற்றி என்பதைக் கண்டும், கேட்டும், உணர்ந்தும், சொச்சம் இருப்போர் சோகமடைந்து, செயலற்றுப் போய்விடக்கூடாதல்லவா, அதற்காகத்தான், “அது என்ன மகாநாடா? தூ! தூ! மரணப்படுக்கை அல்லவா!”— என்று பேசுவது.

நிலைமை எனக்குப் புரிகிறது— நகைப்பினை அடக்கிக்கொள்வது சற்றுச் சிரமமாகத்தான் இருக்கிறது.

கேவலம் மலம்! அவ்வளவும் மலம்!—என்றானாம் வெகுண்டெழுந்தான் பிள்ளை. என்ன? என்ன?— என்று ஏக்கத்துடன் கேட்டான் வேகாப்பண்டநாதன் “அந்த வெற்றிப் பாதையான் விருந்துண்டான் என்று தானே ஏக்கமாக இருக்கிறாய்?’ என்று கேட்டான் வெகுண்டெழுந்தான பிள்ளை, “ஆமாம்?” என்று ஆயாசத்துடன் கூறினான் வேகாப்பணட நாதன். “பைத்யக்காரர்! வெற்றிப் பாதையான் பால் பேணியும் பாதாம் அல்வாவும், மல்கோவாவும், மாதுளையும் சாப்பிட்டானே, அதைத்தானே பிரமாதமான விருந்து என்கிறாய்” என்று கேட்டான் வெகுண்டெழுந்தான்பிள்ளை. ‘‘அது மட்டுமல்லவே, அவல் பாயாசமாம், அவியலாம், பன்னீர் ஜிலேபியாம், வெண் பொங்கலாம், சித்ரான்னமாம், சீரகச்சம்பா சாதமாம” என்று ஏக்கம் பிடித்தவன் கூறினானாம். “நிறுத்தடா,நிறுத்து; இதைத்தான் பிரமாதமான விருந்து என்கிறாயா? அவ்வளவும் கேவலம் மலம் ஆகப்போவதுதானே! விட்டுத் தள்ளு!” என்றானாம், வெகுண்டெழுந்தான் பிள்ளை.

கதை, தம்பி, கதை! இவர்கள் போக்கு எனக்கு அளிக்கும் கதை.

தம்பி! வெகுண்டெழுந்தான் பிள்ளையின் ‘பிரசாரம்’ நடைபெறட்டும், கவலையில்லை; நாம் மேற்கொண்டுள்ள பயணத்தில், புதியதோர் கட்டம் பிறந்திருக்கிறது— அதை எண்ணி மகிழ்வோம்: அதற்கான தகுதியைப் பெறப் பாடுபடுவோம். அந்த வேலையில் ஈடுபட வேண்டும், அதற்கு உன் அறிவாற்றலைப் பயன்படுத்து. மாநிலமாநாடு தந்துள்ள ஆர்வம், அந்த அறிவாற்றலை வளமுள்ளதாக்கும் — வெற்றிக்கு வழிகோலும். உனக்கென்ன சொல்லித் தரவாவேண்டும்! வெட்டிவா என்றால் கட்டிவரும் தம்பி அல்லவா!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

---


5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபர் கூற்றைக் கேட்டுக்கொணடிருந்த ஒரு தொண்டர் வேக வேகமாக வந்தார் என்னிடம், “ஒரு திருத்தம். எல்லோரும் சகித்துக் கொண்டிருக்கவில்லை. நாங்கள், எங்கள் கண்டனத்தைக் காட்டினோம்” என்றார். “நீங்கள், யார்?”, என்றேன். “என்னங்க,என்னைத்தெரியவில்லையா!”, என்றார், அவர். உற்று நோக்கியபோது, எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர், நமது மாணவத்தோழர்! “நீங்கள், எங்கே இங்கே......?”, என்றேன். “என்னங்க செய்வது? ஆதாரக்கல்விப் பயிற்சியிலிருக்கும் எங்களையெல்லாம் இங்கு கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். காலையில் எழுந்ததும் எங்களையும் பிரார்த்தனையில் கலந்து கொள்ளச் சொன்னார்கள், முதல் நாள். கட்டுப்பாட்டை எண்ணி, அதிகாலை 4-மணிக்கே, சென்றோம். போனால், புரியாத இந்தியில் ஏதேதோ பாட ஆரம்பித்தார்கள. நாங்கள் இது தமிழ் நாடு. திருக்குறளில், உளள முதல் அதிகாரத்தைச் சொல்லி வணங்குங்கள், என்றோம். முதலில் மறுத்தார்கள்! பிறகு வெற்றி பெற்றோம்!”—என்றார். இரண்டு இலட்சம் ரூபாய்க்குமேல் சர்க்கார் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்த சர்வோதயப் பந்தலையும், தலைவர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த குடிசைகளையும் போய்ப் பார்த்தேன். ஒரு மாமரத்தடியில் பத்துப பதினைந்துபேரைக் கூட்டி வைத்துக்கொண்டுஜெயப்பிரகாஷ் நாராயண், என்னமோ சொல்லிக் கொண்டிருந்தார், இந்தியில். அதைப் பக்தி சிரத்தையுடன் பல நிருபர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். காந்தியார் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய பியாரிலாலைக் கண்டேன். அவர் முகம் ஏனோ, மிகச் சோர்வுடன் இருந்தது! தேபர், ஒருகுடிலில் இருந்தார், அங்கு காமராஜஉள்பட பலர்இருந்தனர். அதற்கு அருகில் மராட்டியரின் குரலாக விளங்கும் சங்கர்ராவ் தேவ் இருந்தார். அவர் குடில்தான் எப்போதும், எவருடைய சந்தடியுமற்று இருந்தது. “வணக்கம், தேவ்” என்றேன். அவரும், உற்சாகத்துடன் “என்ன சேதி?”, என்றார். “ஏன்! உங்கள் குடில் பக்கம், காங்கிரஸ் தலைவர்கள், மந்திரிகள் யாரையும் காணோம்’, என்றேன். கொஞ்சம் சிரித்துவிட்டு, ‘‘ஏன்? நீங்கள்தான் சொல்லுங்களேன்!” என்றார். பம்பாய் நகர், மராட்டியத்துக்கு வேண்டும் என்று பிடிவாதமாக நீங்கள் போரிடுவதுதானே காரணம்— என்றேன! “தமிழ் நாட்டார் மிக்க புத்தி கூர்மையுளளவர்கள். மிக நன்றாக புரிந்து கொண்டுள்ளீர்களே. என்ன செய்வது? காந்தியார் வளர்த்த காங்கிரசா, இன்று இருப்பது!”, என்றார் வருத்தத்துடன். திரும்பிப்பார்த்தேன், புதிதுபுதிதாக காங்கிரசுககுத் தத்துப பிளளையாகயிருக்கும்‘டலர்’ தேபரின் குடிலில் கூடிகுலவிச் சிரிப்பது எனகாதில் கேட்டது!!

★

# முழங்கும் அல்ஜீரியா!

'சுதந்திர வீரர்களா—விடாதே, பிடி, அடி! சுடு! சுடு!' என்று பிரெஞ்சு ஆதிபத்தியம் ஆர்ப்பரிக்கிறது. 'சுடுவாயா? என்னை பிடிப்பாயா? இதோபார்......' என்று எதிர்த்து ஏகாதிபத்தியவாதிகளை முறியடிப்பதில் அல்ஜீரிய விடுதலை வீரர்கள் தீவிரமாகியுள்ளனர். பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் துப்பாக்கிகளும்—அல்ஜீரிய சுதந்திர வீரர்களின் துப்பாக்கிகளும் சந்திக்கின்றன. ஒருபுறம் பிரெஞ்சு ராணுவம்—மறுபுறம் அல்ஜீரிய சுதந்திரப்படை! பிரெஞ்சுப் பிடியிலிருந்து விலகி விடுதலை வாழ்வு நடத்த விரும்பிய அல்ஜீரியா—பிரான்ஸை எதிர்த்து 'சுதந்திரப் போர்பிரகடனம்' செய்துவிட்டது. 15000 சுதந்திர வீரர்கள் போர்முகாம் அமைத்து விடுதலை முழக்கம் செய்கின்றனர். அந்த உரிமை வீரர்களை அடக்கி அழிக்க—பிரெஞ்சுசர்க்கார் மூன்று லட்சம் துருப்புக்களை அனுப்பியிருக்கிறது. 64 ஹெலிகாப்டர்களை உபயோகித்து வருகிறது ஜூலைகடைசிக்குள் இன்னும் 127 ஹெலிகாப்டர்களை பிரெஞ்சு சர்க்கார் அனுப்பிவைக்கும். அல்ஜீரியர் நடத்தும் கொரில்லாயுத்தத்தை சமாளிக்கமுடியாமல் பிரெஞ்சுத்துருப்புக்கள் திணறுகின்றன 300 எலிகாப்டர்களுடன் அல்ஜிரியர்களின் கொரில்லாப் போரை முடித்துவிடலாம் என்று—பிரெஞ்சு ஹெலிகாப்டர் கமாண்டர் அறிவித்துள்ளார்! பாவம் அவர் எங்கே அறிவார்—முன்னூறு ஹெலிகாப்டர்களால் முடிந்துவிடும்போரல்ல அது என்பதை! பதினெட்டு மாதங்களாக நடைபெற்று வரும் சுதந்திரப்போர் அவ்வளவு சுலபமாக அடங்காது—அல்ஜீரியா உரிமை பெரும்வரையில் அடங்காது, அழியாது.



திருச்சி மாநாட்டில் அமைக்கப் பெற்றிருந்த புத்தர் மாடம்

தினம்ஒன்றுக்கு 50 சுதந்திரவீரர்களைபலிகொடுக்க துணிந்துள்ள அல்ஜீரியர்கள் எதற்குத்தான் அஞ்சப் போகின்றனர்! கடந்த ஏப்ரல் 21ந் தேதி நடைபெற்ற 24மணிநேரம் போராட்டத்தில் மட்டும். 141 அல்ஜீரிய சுதந்திர வீரர்களை வேட்டையாடி கொன்றிருக்கிறது பிரெஞ்சுப்படை! மார்ச்சு, ஏப்ரல் மாதங்களிலமட்டும் 75 பிரெஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் நடத்த அல்ஜீரியர்கள் தயங்குவதேயில்லை. பலமும் பாதுகாப்பும் பலவசதிகளும் மிகுந்த பிரஞ்சுப் பட்டாளமே பயந்து ஒடுங்குகிறது—அந்த அல்ஜீரிய சுதந்திர வீரர்களிடம்! 3 லட்சம் ராணுவ வீரர்கள் பிரெஞ்சுப் பேராசையின் பிரதிபிம்பங்கள்—அந்த மூன்று லட்சம் ராணுவத்தினரும்! அந்த மிகப் பெரும அணிவகுப்பை எதிர்த்து—குட்டிப்பட்டாளம் சுதந்திரச் சேனை, அல்ஜீரியா உரிமையாளர்கள் 15000 பேர் போரிடுகின்றனர்!

நீண்ட நாட்களாகவே பிரான்ஸின் காலனியாக இருந்து வருகிறது அல்ஜீரியா. மேலும் அல்ஜீரியாவை பிரெஞ்சு தனது மாகாணங்களில் ஒன்றாகவே கருதி நடத்தி வருகிறது. மத்திய ஆப்ரிக்காவில் ஏராளமான ஐவேசுகள் இருக்கிறது பிரான்சுக்கு. அதை கவனித்துக்கொள்ள அல்ஜீரியா சாதகமாக இருக்கிறது. மற்றும மேற்கத்திய தளங்களும் அங்குதான் அமைந்திருக்கிறது. இதையெல்லாம் பாதுகாக்கும் நினைப்புடனே பிரான்ஸ் அல்ஜீரியாவை கைக்கழுவ வெறும்புகிறது.

அல்ஜீரியா சின்னஞ்சிறிய நாடல்ல. பிரான்ஸைப்போல—தன்னை அடக்கி ஆளும் தேசத்தைப் போல நான்கு மடங்கு பெரியது.

ஆனால், மக்கள் தொகை விஸ்தீரணத்திற்கு ஏற்ற வகையில் அமையவில்லை. ஒரு கோடி அரபுக்களும், 10-லட்சம் ஐரோப்பியர்களும்தான் அங்கு வாழ்கின்றனர். அரபுக்களின் தொகை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆனால், அவர்களின் வாழ்க்கைத்தரமோ, பொருளாதார வளர்ச்சியோ எதுவுமே அபிவிருத்திஅடையவில்லை. அவர்களுக்கு நியாயமாககிடைக்கவேண்டிய அளவுக்குக்கூட அரசியல்உரிமைகள் அளிக்கப்படவில்லை: அல்ஜீரியாவில் குடியேறினவர்களான ஐரோப்பியர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் உள்ள உரிமைகள், வாழ்க்கை வசதிகள், பொருளாதார உயர்வுகள்—அரபுக்களுக்குக் கிடையாது. அடக்கி ஒடுக்கப்பட்ட அரபுக்கள் ஆர்த்தெழுந்துவிட்டனர்! பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சங்கநாதம் செய்துவிட்டனர்! பதினெட்டு மாதங்களாகத் தொடர்ந்து கிளர்ந்து எரிந்துவரும் சுதந்திரத் தீ இப்பொழுது—கொழுந்துவிட்டு ஜ்வாலையுடன் தகிக்கிறது.

தேசிய சுதந்திரத்துக்காக அல்ஜீரியாவில் பாடுபடும் மக்கள் பெரும் அளவில் கொல்லப்படுவதைக் கேட்டு, இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் நேபர் துக்கம் தெரிவித்துக்கொண்டார். நேரு தினசரி, ஒருயோசனை, விடுக்கிறார். 'அல்ஜீரிய மககளின் சுதந்திரப் போராட்டம் வெற்றி பெறவேண்டும்' என்று ஆசிகூறினர். அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களுக்காகவருந்தி அனுதாபம்தெரிவித்தனர்.

அல்ஜீரியாவின் சுதந்திரத்துக்கு ஆதரவு தருவோர்தான்—திராவிடம் பிரியவேண்டுமென்றுகேட்பது காட்டுமிராண்டித்தனம் என்கின்றனர். நாக நாடு கேட்கும் நாகமலை நாகர்களின் தலைவன் பிஜோவுக்கு விலைவைத்திருககிறார்கள். இந்தியாவில் சுதந்திரம் கேட்கும் மக்களை சுட்டுத்தள்ளும் இந்த ஆளும் வர்க்கம்தான்—அல்ஜிரியர்ஸ் மக்களின் சுதந்திரத்துக்கு ஆதரவு தருகிறார்கள்! இங்கே ஆதிபத்திய வெறி! அடக்குமுறை ஆர்ப்பாட்டம்! அங்கே சுதந்திரத்திற்கு சப்பைக்கட்டு! மிக வேடிக்கையான 'பஞ்சசீல' மனிதர்கள்.

"எழில்"

அழகாகப் பேசுவதே அடாத காரியம் என்று இங்குள்ளோர், நம்மவர்கள் மீது குற்றம் சாட்டுகிறார்களல்லவா? படத்திலிருக்கும் லவேல் தாமஸ் அழகாகப் பேசுகிறார் என்பதற்காக அமெரிக்காவிலுள்ள சர்க்காரின் பாராட்டுதலைப் பெற்றவர்! 'அவர் ஏறிவிட்டாரா?' என்று பார்த்த பிறகே. ஒவ்வொரு நாளும் நியூயார்க்கிலிருந்து இரவு 7-மணிக்குப் புறப்படும் ரெயில் கிளம்புமாம்! தினசரி 70-மைலுக்கப்பாலிருக்கும் தன்னுடைய சிற்றூரிலிருந்து நியூயார்க் போய் வானொலியில் பேசுவது, வழக்கம். ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தேர்தல், கொரியச்சண்டை, இங்கிலாந்துப் பார்லிமெண்டு விவாதம் இதுபோல எந்தப் பொருளானாலும், அவ்வளவு அழகாகவும் விளக்கமாகவும் பேசுவாராம். எங்காவது ஒரு மண்டபத்தில் அவருடைய சொற்பொழிவு இருக்கிறதென்றால் போட்டி போட்டுக்கொண்டு மக்கள் போய் 'டிக்கெட்' வாங்கிக்கொண்டு தயாராக இருப்பார்களாம். ஒரு நாள் அமெரிக்கத் தந்தி இலாகாவினர், ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அதற்குள் தாமசுக்குத் தந்தி கொடுப்பவர்களுக்குக் கட்டணம் வாங்கப்படமாட்டாது என்று தெரிவித்தனராம். அந்த ஒருமணி நேரத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் மூன்று இலட்சம் தந்திகள் போய்க்குவிந்தனவாம்! பண்டிதரிலிருந்து பாமரர் வரை, அவருடைய பேச்சைக் கேட்க ஆவல்கொள்வராம். ஐரோப்பா, ஆசியா, ஆபிரிகா, ஆஸ்திரேலியா, இந்தியா உள்பட பல நாடுகளையும் சுற்றிப் பார்த்திருக்கிறார். இறந்துபோன, இங்கிலாந்தின் ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வந்தபோது இவரும் வந்தாராம்! அப்படியானால், இப்போது அவருக்கு என்ன வயதிருக்கும் என்றெண்ணுகிறீர்கள்? தொண்டு கிழவர்தான்! எந்தப்பொருளானாலும் அதனை அழகுற எடுத்துச் சொல்லவேண்டும், அப்போதுதான் மக்கள் மனதில் பதியும், அப்படி எடுத்துச் சொல்வதென்பது இலேசான காரியமல்ல, எவ்வளவு சிந்தித்துப் பேசவேண்டியிருக்கிறது தெரியுமா, என்கிறார் இவர். இப்படி பேசும் நிலையைப் பெற, தாமஸ், அடைந்துள்ள சங்கடங்கள் கொஞ்சநஞ்சமல்ல! சுரங்கத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், மாடு மேய்த்திருக்கிறார், பத்திரிகை நிருபராக இருந்துள்ளார், பள்ளியாசிரியராக வேலைபார்த்திருக்கிறார். கல்விகற்கும்போது கல்லூரிக்குச் செலுத்தப் பணமில்லாததால் பத்துவயதில் பேப்பர் விற்கும் பையனாகவும், பிறகு சமயற்காரனாகவும், பின்னர் ஒரு கல்லூரிப் பேராசிரியர் வீட்டில் மாடு கறப்பவனாகவும் இருந்தாராம்! இவ்வளவு கஷ்டநஷ்டங்களுக்கிடையே கல்வி கற்றாலும் கூட, ஒருபோதும் தன்னுடைய சொந்த ஊரையும் வீட்டையும் மறந்ததில்லையாம். ஒரு மணிநேரம் கூட அல்ல சில நிமிடங்கள் செய்திகளைச் சொல்வதற்காக ரூபாய் ஐநூறு வரையில் இவருக்கு வானொலியினர் தருகிறார்கள். அதைக்கொண்டு, வானளாவும் மாட மாளிகைகளைக் கொண்ட நியூயார்க்நகரில் நாகரீகபோகங்களுடன்வசிக்கலாமல்லவா? இவர் அதை விரும்பவில்லை. தினசரி இரவு 7-மணி ஆனதும், ரயிலேறி 70-மைலுக்கப்பாலுள்ள தனது வீட்டுக்கு வந்துவிடுவாராம். இப்படி ஒவ்வொரு நாளும் 140-மைல இரயில் பிரயாணம் செய்யும்போதுதான், பலவித சிந்தனைகள் உருவெடுப்பதாக இவர் கூறுகிறார்! சிறந்த சொற்பொழிவாளரான இவர், தனியாக இருக்கும்போது அதிகம் பேசமாட்டாராம். வீட்டில் துணைவியுடன்கூட, வீண்வார்த்தைகள் ஆடமாட்டாராம். எப்போதும், எழுதிக்கொண்டும், படித்துக் கொண்டுமிருப்பாராம். அழகாகப் பேசுபவர் என்கிற ஒரேகாரணத்துக்காகப் பொருளும் குவிகிறது; புகழ் மாலைகளும் சூட்டப்படுகிறது மேலைநாட்டில். இத்தனைக்கும் அவர் ஒரு இலட்சிய வாதியல்ல! அழகாகப் பேசுகிறவர்— அவ்வளவுதான்!! பேச்சு, அவருக்குத் தொழில்; அதனைப் பயன்படுத்தி, அவர் சீமானாக விளங்கினார். ஆனால், இங்கே, அருமைத் தாயகத்தை விடுவிக்க, அறிவொளிகொளுத்தும் வகையில், நமது காவலர்கள் பேசுகிறார்கள். தமது, திறமையைப் பயன்படுத்துகிறார்கள். பாராட்டுத்தராவிடினும் கூட, காமராஜர்கள், பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்பதுபோல 'அழகாகப் பேசுகிறார்கள்!' என்று ஆத்திரத்தோடு ஏசுகிறார்கள். அங்கே, போற்றப்படுகிறார், தாமஸ்! இங்கே, பேச்சுக்கலையும், இகழப்படுகிறது. இதிலே, நமது முன்னணித் தொண்டர்கள் நற்தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதால்!!



★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.